# அரசு ஊழியர்

**2022 பிப்ரவரி மலர்:43 இதழ்:02**

**தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கத்திற்காக**
**அச்சிட்டு வெளியிடுபவர்: மு.அன்பரசு**
**ஆசிரியர் : ஆ.செல்வம்**

**ஆசிரியர் குழு:**
**மு.அன்பரசு, மு.பாஸ்கரன், தெ.வாசுகி, இரா. மங்களபாண்டியன், கோ.பழனியம்மாள், சி.பரமேஸ்வரி, சா.டானியல் ஜெயசிங், சா.கோதண்டபாணி, அ.குபேரன்**

**இதழ் வடிவமைப்பு:**
**ஆர்.காளத்தி** *9677003178*

*ஆண்டுச் சந்தா : ரூ.100*
*தனி இதழ் : ரூ.10*

**முகவரி:** *பழைய எண். 48*
*புதிய எண் 46, தேரடித் தெரு*
*திருவல்லிக்கேணி, சென்னை - 600 005.*
e-mail : arasuoozhiyar@gmail.com

**அச்சகம்:** *சென்னை ஆப்செட் பிரிண்டர்ஸ், 19/1 & 21/2, கிட்டாபாத் கான் பகதூர் தெரு, எல்லீஸ் ரோடு, அண்ணாசாலை, சென்னை-600002*


## சூடா ஒரு கோப்பை சூப்

தாழ்ந்தவர் உயர்வதென்றால்
உயர்ந்தவர் தாழ்வதல்ல
வீழ்ந்தவர் எழுவதென்றால்
நின்றவர் வீழ்வதல்ல
ஆழ்ந்தவர் உயிர்ப்பதென்றால்
மற்றுளோர் அமிழ்வதல்ல
வாழ்ந்திட வேண்டும்
எல்லாமனிதரும் என்பதேயாம்!

*- நாமக்கல் கவிஞர்*

தலைவர் மடல்

# எல்லா புகழும் தோழமைக்கே!!

## தோழமைக்கு தோள்கொடுத்த வெற்றி மாநாடு!

தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கத்தின் 14ஆம் மாநில மாநாட்டினை சென்னை மாநகரில் நடத்த வேண்டும் என தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கத்தின் மாநில செயற்குழு முடிவெடுத்து எப்படி நடத்தி முடிக்க போகிறார்கள் என்ற பொறுப்பை கொடுத்தபோது, மலைப்பாக தான் இருந்தது. மாநில செயற்குழு, மாநில மாநாட்டில் முதல்வரை அழைப்பது எனவும் கொரானா பெருந்தொற்று மற்றும் அமைப்புவிதிகளின் படி டிசம்பர் -18.19, 2021 தேதிகளில் நடத்துவது எனவும் முடிவாற்றப்பட்டது.

இந்நிலையில் கொரானா தடுப்பு (ம) பாதுகாப்பு அம்சங்களோடு எப்படி நடத்துவது? பல்வேறு மாவட்டங்களில் இருந்து வரும் மாநில, மாவட்ட, வட்டக்கிளை நிர்வாகிகள், துறைவாரிச் சங்க, பிரிவுவாரி (ம) தோழமைச் சங்க தலைவர்களை, மாநாட்டு பிரதிநிதிகளை வரவேற்பதும், விருந்தோம்பல், தங்கும் வசதி உள்ளிட்ட பாதுகாப்பு வசதிகளை ஏற்படுத்தித் தரும் பணிகளை சென்னை மாவட்ட தோழர்கள் கொரானா பெருந்தொற்று பரவிவரும் காலத்தில் எப்படித் தான் செய்யப் போகிறார்கள் என்ற மலைப்பும், பதற்றத்தையும் மாநில மையத்திற்கு ஏற்படுத்தியது. எதையும் துணிச்சலுடன் எதிர்கொள்ளும் பாங்கோடும், நமது அமைப்புக்கே உரிய “எதையும் சவாலாக ஏற்றுக் கொள்வது" என்ற இயல்பின் அடிப்படையில் சென்னை மாவட்டத் தோழர்கள் நேர்த்தியாக தங்களது பணியை அர்ப்பணிப்பு உணர்வோடு நடத்தி முடித்தார்கள் என்பது பாராட்டுக்குரிய அம்சமாகும். மாநாட்டுப் பணி மாநில மையம் சென்னை மாவட்டத்திடம் ஒப்படைத்துவிட்டது என்ற

நிலையில் இருந்து மாநில செயற்குழு முதல்வர் பங்கேற்க ஏதுவான மண்டபம் பார்ப்பது, மாநாட்டு நிதி சேகரிப்பது, துறைவாரி, தோழமை சங்க நிர்வாகிகளுக்கு அழைப்புவிடுப்பது, அவர்களின் பங்களிப்பை உறுதிப்படுத்துவது என்ற செயல்திட்டங்களோடு தொடர் நடவடிக்கைகள் எல்லாவற்றையும் யோசித்துக் கொண்டே இருந்தால் நோக்கம் நிறைவேறாது என்ற பின்புலத்தில் உடனடியாக செயலில் இறங்க வேண்டும் என முடிவெடுத்துசென்னையில் மாநில செயற்குழு முடிந்த அன்றே வரவேற்புக் குழு அமைக்கப்பட்டது.

வரவேற்புக் குழுவின் ஒவ்வொரு தலைவர்களும் முன்னணி ஊழியர்களும் தீப்பொறியாக இருந்து செயல்படுவார்கள் என்ற நம்பிக்கை அந்த முதல் கூட்டத்திலேயே தெரிந்தது. 2003-ல் ஒரே அரசாணையில் 1.76 லட்சம் பேரை பணி நீக்கம் செய்த தமிழக அரசின் உத்தரவை எதிர்த்து சட்ட மன்றத்திலும் நமக்காக குரல் எழுப்பி உச்சநீதிமன்றத்தில் வழக்கு தொடர்ந்தும், தமிழகத்தின் அரசு ஊழியர் ஆசிரியர்களை மீள பணியமர்த்தி பாதுகாத்த இந்திய தொழிற்சங்க மையத்தின் தமிழ் மாநிலத் தலைவர் தோழர் அ. சவுந்தரராசன் அவர்கள் வரவேற்புக் குழுவின் தலைவராக பொறுப்பை ஏற்றுக் கொண்டதுமே, மாநில மாநாட்டிற்கு ஒருகம்பீரம் வந்துவிட்டது. மாநில செயற்குழுவின் முதல் பணியாக மாநாட்டு இலச்சினையை வடிவமைத்து வரவேற்புக் குழு அறிமுகப்படுத்த அனைத்து மாவட்ட நிர்வாகிகளின் கையில் கிடைத்ததுமே மாநாட்டு பணிகள் எழுச்சியோடு துவங்கிய உணர்வை மகிழ்ச்சியுடன் வெளிப்படுத்தியது தமிழகம் முழுவதும் மாநாட்டு இலச்சினை மாநாட்டு விளம்பரங்களில் துண்டு பிரசுரம் சுவரொட்டிகளில் கம்பீரமாக இடம் பெற்றது. அனைத்து மாவட்டங்களும், அவரவர்களுக்கு அளிக்கப்பட்டிருந்த மாநாட்டு பணிகளான நிதி சேகரிப்பு, பிரச்சாரம் என ஆர்வத்துடன் களப்பணியாற்றினர் நடைபெற்ற பணிகள் அவ்வப்போது சமூக வலைதளங்கள், பத்திரிக்கை ஊடகத்தின் மூலமாக வெளியிட்டது, தமிழகம் முழுவதும் ஊழியர்கள் மத்தியில் எழுச்சியையும், எதிர்பார்ப்பையும் உருவாக்கியது. சென்னை மாவட்டத் தோழர்கள் துறை வாரிச் சங்க தலைவர்கள், முன்னாள் நிர்வாகிகள் உள்ளிட்டோர் இலட்சிய உணர்வோடு மாநாட்டுப் பணிகளை, மாற்றாரும், வியந்து பார்க்கும் அளவில் பணியாற்றியது உண்மையிலேயே மிகப் பெரிய நம்பிக்கையை விதைத்தது.

நமது இயக்க வரலாற்றில் சென்னையில் மிகப் பெரிய அளவிலான அகில இந்திய மாநாடுகளை மாநில மாநாடுகளை, வேலை நிறுத்த ஆயத்த மாநாடுகளை, கருத்தரங்கங்களை, பெருந்திரள் முறையீடு போராட்டங்களை சிறப்பாக நடத்தியிருக்கிறோம். அப்படிப்பட்ட கடந்த கால வரலாற்றுச் சுவடுகளை புரட்டிப் போடுகிற வகையில் இந்த மாநாடு மிக சிறப்பாக நடந்து முடிந்திருக்கிறது. மாநில மாநாட்டின் துவக்க நிகழ்வு மாநில செயற்குழு முடிவாற்றியபடி அனைவரும் நேர மேலாண்மையை கடைபிடிப்பது என்ற முடிவின்படி 2021 டிசம்பர் 18 அன்று காலை 8.30 மணிக்கு மாநில நிர்வாகிகள், மாநில செயற்குழு உறுப்பினர்கள் பெண் பிரதிநிதிகள் அனைவரும் சீருடை அணிந்து தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கம், அகில இந்திய மாநில அரசு ஊழியர் சம்மேளனத்தின் பதாகையை உயர்த்தி பிடித்து விண்ணதிரும் முழக்கத்தோடு, அணிவகுத்து சென்றது, இதுவரை இல்லாத ஒரு வரலாற்றினை படைத்துள்ளது. இந்த ராணுவ அணிவகுப்பின் முன்பாக தமிழகத்தின் கலாச்சார பண்பாட்டு பாரம்பரியத்தை நினைவுபடுத்தும் வகையில் சிறுவர்களின் சிலம்பாட்டமும் அதற்கு முன்பாக காவல்துறையின் இசை முழக்கமும் பார்த்தோர் அனைவரின் உள்ளம் கவர்ந்த நிகழ்வாக இருந்தது. கொடியேற்ற நிகழ்ச்சிக்கு என்றே தனியான கொடி மேடை, நமது இயக்கத்தின் ஸ்தாபக தலைவர்கள் கொடி அணிவகுப்பை நேரடியாக நம்மை பார்ப்பது போல் தோழர் MRA, KRS, RMS போன்றோரின் பிரம்மாண்டமான போர்டுகள் கம்பீரமாக வைக்கப்பட்டிருந்தது. அனைவரின் மனதிலும் அவர்கள் போட்ட லட்சிய பாதையை வெற்றி பாதையாக அமைப்போம் என்று சொல்ல

வைத்தது. அனைத்து பிரதிநிதிகளும் மாவட்ட வாரியாக கொடிமேடை முன்பாக அணிவகுத்தும் முன்னாள் இந்நாள் நிர்வாகிகளும் பங்கேற்றது கண் கொள்ளாகாட்சியாக அமைந்தது. முன்னாள் மாநில நிர்வாகிகள் இந்நாள் மாநில நிர்வாகிகளுடன் புகைப்படம் எடுத்தது கொண்டது நெகிழ்ச்சியாக இருந்தது. தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கத்தின் கொடியையும், அகில இந்திய மாநில அரசு ஊழியர் முழக்கங்கள் எழுப்பப்பட்டு, பட்டாசுகளும் வெடிக்கப்பட்டது. கொடி கம்பத்தில் கொடிகள் கம்பீரமாக ஏற்றப்பட்டு, பட்டொளி வீசி பறந்தபோது கொடி வணக்கம் செலுத்திய நிகழ்வு, மறைந்த KRS கண் முன்னாள் கொண்டு வந்து நிறுத்தியது போன்ற உணர்வினை அனைவருக்கும் ஏற்படுத்தியது.

கொடியேற்றம் முடிந்து தலைவர்கள் விருந்தினர்கள், பிரதிநிதிகள் வரிசையாக அணிவகுத்து ஒவ்வொருவராக தியாகிகளுக்கு அஞ்சலி செலுத்தியதும், மறைந்த தியாகிகளின் வழிநடப்போம் என எல்லோரையும் சொல்லவைத்த நெகிழ்ச்சியாக இருந்தது. மாநாட்டு அழைப்பிதழ், வேலை அறிக்கை பொதுச் செயலாளர் அறிக்கை, மாநாட்டு தீர்மானங்கள், படிவங்கள் அடையாள அட்டைகள், குறிப்பேடுகள், துண்டு பிரசுரங்கள் ஆகிய பணிகளை உரிய நேரத்தில் வண்ணமயமாக, அழகாக அச்சிட்டு உதவிய வைகை பிரிண்டர்ஸ் அச்சக கலைஞர்களின் பணிமிகவும் பாராட்டுக்குரியது. தமிழர் கலாச்சாரமான கரகாட்டம், தப்பாட்டம் குழுவின் சிறப்பான கலை விருந்தளித்த மாணவ செல்வங்களுக்கு எவ்வளவு பாராட்டினாலும் தகும். மாண்புமிகு முதல்வரையும் ரசிக்க வைத்த பெருமை வளைவுகள், பேனர்கள் வண்ணமயமாக, அரசு ஊழியர் எண்ணங்களை பிரதிபலிக்கும் வண்ணம் கோரிக்கைகளை தாங்கி நின்றன. மாநாட்டு அரங்கத்தின், அலங்கார வேலைகள், பேனர்கள், மாவட்ட வாரியான இருக்கை அமைப்பு, பிரதிநிதிகள் மனங்களை கொள்ளையடிப்பதாக அமைந்தது. மேடையின் பின்புற பேனர் உரிமைகளை மீட்கும் அமைப்பின் மாநாடு என சொல்ல வைத்தது. உலகம் முழுவதும் ஊடகத்தில் பார்க்கக்கூடிய பேனராக அது அமைந்தது நமது உழைப்பின் சாட்சியாக இருந்தது. 2021 டிசம்பர் 17 அன்றே இரவு சாப்பாடு நிர்வாகிகள், மாநில செயற்குழு உறுப்பினர்கள் மற்றும் தொண்டர்கள் உணவருந்த ஏற்பாடு செய்யப்பட்டது. டிசம்பர் 18, 19 நாட்களில் திட்டமிட்டதைவிட கூடுதல் எண்ணிக்கையில் அறுசுவை உணவு, அரங்கத்தைவிட்டு வெளியே, அசைவம் சாப்பிட தனியான மைதானத்தில், உணவருந்த ஏற்பாடு செய்யப்பட்டது. மாநாடு முடிந்து 5000 பேருக்கு மேலாக டிசம்பர் 19 அன்று இரவு உணவு சூடாக பார்சல் வழங்கப்பட்டது. இந்த அறுசுவை உணவு, வழங்கிய சமையற் கலைஞர்களது பணிகள் மிகவும் பாராட்டுக்குரியது. மாநாட்டில் பங்கேற்று சாப்பிட்டதால் யாருக்கும் எந்தவித உடல் நல கோளாறும் இல்லாமல் சுத்தமாக ஆரோக்கியமாக உணவளித்த சமையல் கலைஞர்களை எவ்வளவு பாராட்டினாலும் தகும்.

மாநாட்டு பிரதிநிதிகளுக்கு மணமான உணவுக்கு தேவையான ஏலக்காய், மிளகும் மற்றும் டீத்தூள் வழங்கிட்ட தேனி மாவட்டத்திற்கு வாசம் நிறைந்த வாழ்த்துக்கள். சுவையான காராசேவும், இனிப்பான கடலை மிட்டாயும் வழங்கிட்ட தூத்துக்குடி மற்றும் கடலை மிட்டாயோடு சரவெடி வழங்கிய விருதுநகர் மாவட்டத்திற்கும் பாராட்டுக்கள். பாசத்திற்கு பஞ்சமில்லை என பஞ்சமில்லாமல் பஞ்சாமிர்தம் தந்த பழனி திண்டுக்கல் HRCE மாவட்ட தோழர்களுக்கும் பாராட்டுக்கள். மாநாட்டின் நுழைவுவாயிற் தொடங்கி, அருகில் உள்ள ரவுண்டானா வரைக்கும் தினமும் சுத்தம் செய்து சுகாதாரம் பேணிகாத்த சென்னை மாநகராட்சியின் தூய்மை பணியாளர்களது தூய்மை பணி என்றும் நம் நெஞ்சங்களில் நீங்காது நிலைத்திருக்கும். மாநாடு நடத்த முடிவு செய்த போது, முதலில் பணியினை துவக்க நிதி தந்து உதவிட்ட அத்தனை துறைகளின் சங்க தலைவர்களின் தோழமை என்றும் நம் இயக்க வரலாற்றில் நிலைத்திருக்கும். இரண்டு நாட்கள் அரங்கத்திற்குள்ளும், மாநாட்டுத் திடலிலும்

இரவு பகல் பாராது தொண்டாற்றி தலைமைச் செயலக தோழமை போராளிகளின் பணி பாராட்டிற்குரியதாகும். அரங்க ஏற்பாடு, மேடை ஏற்பாடு, நுழைவு வாயில், கொடி ஏற்பாடு, கொடி அணிவகுப்பு, கொடி மேடை, இருக்கை ஏற்பாடு போன்ற ஏற்பாடுகளை தொண்டர்களே செய்து முடித்தது பாராட்டுக்குரியது. உணவுக்குழுவில் சமையலறையின் அத்தனை பணிகளையும், சுகமான சுமையாய் ஏற்று செயல்பட்ட சத்துணவு ஊழியர் சங்கத்தின் முன்னாள் மாநில தலைவர் கே.பழனிச்சாமி அவர்களின் உழைப்பு உன்னதமானது. ஓய்வு பெற்றாலும் வெளியூரில் இருந்து வந்து இரவு பகல் பாராது தொண்டராக பணியாற்றிய முன்னாள் மாநில நிர்வாகிகளின் பணிகள் பாராட்டுக்குரியது.

14ஆம் மாநில மாநாட்டில் புதிய யுக்தியாக டிச. 17,18,19 மூன்று நாட்கள் தீக்கதிர் நாளிதழில் தனியான விளம்பர இணைப்பு, முதல்வரின் நிகழ்ச்சி பெரிய அளவிலாக விளம்பரம், மாநாடு முடிந்து அனைவருக்கும் நன்றி என அம்சங்களிலும் இந்த முறை விளம்பரம் எல்லோராலும் பாராட்டக்கூடியதாக அமைந்தது. நமது சங்கத்தின் எந்த மாநாட்டிலும் கிடைக்காத விளம்பரம், இந்த மாநாட்டில் தமிழக அரசின் செய்தி மக்கள் தொடர்பின் வழியாக நேரடி ஒளிபரப்பு நமது சங்கத்தின் நிகழ்வுகளை உலகம் முழுவதும் பட்டிதொட்டியெல்லாம் ஒளிபரப்பிய ஊடகங்கள், சமூக வலைதளங்கள், பத்திரிக்கைகளுக்கு பாராட்டுக்கள். ஊழியர்களின் வாழ்வாதார கோரிக்கைகளை வென்றெடுக்க நம்மோடு கடந்த காலங்களிலும், இப்போதும், எப்போதும் நம்மோடு களத்தில் நிற்கும் ஜாக்டோ ஜியோ தலைவர்கள், இந்த மாநாடு சிறக்க எல்லா வகையிலும் தோழமையோடு தோள் கொடுத்தார்கள் அவர்களுக்கும் மனமார்ந்த பாராட்டுக்கள். மாநாடு தொண்டர்களுக்கு சீருடை தந்து உதவிய நல்ல உள்ளத்தை இயக்கம் உள்ளவரை நினைவில் கொள்வோம். கடுமையான மழை, குளிரில் நடைபெற்ற மாநாட்டில் பங்கேற்ற பிரதிநிதிகளின் உடல்நலம் பாதுகாக்க பெட்ஷீட் போர்வை தந்து பாரி வள்ளல்களான கரூர், திருவண்ணாமலை மாவட்ட மையத்திற்கு மனம் நிறைந்த பாராட்டுக்கள்! கருத்தரங்கு அமர்வுகளில் கருத்துரை வழங்கிய கருத்துரையாளர்கள், மகளிர் அமர்வில் சிறப்புரையாற்றிய தோழர்கள், நாடாளுமன்ற உறுப்பினர், சட்டமன்ற உறுப்பினர்கள், இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர், தொழிற்சங்க தலைவர்கள் பணிகள் பல இருந்தும் மனநிறைவோடு பங்கேற்று சிறப்பித்த மாண்மிகு முதல்வருக்கும் நன்றி கலந்த பாராட்டுக்கள்! மாநாட்டு பணிகள் துவங்கியது முதல் முடியும் வரை சொந்த விடுப்பினை எடுத்துக் கொண்டும், சென்னையில் இதுவரை கண்டிராத மழை, வெள்ள பாதிப்புக்கு மத்தியிலும், தன் குடும்ப வேலைகளை துறந்து, இரவு பகல் பாராது எல்லா குழுக்களிலும் திறம்பட பணியாற்றிய தொண்டர்களை எவ்வளவு வேண்டுமானாலும் பாராட்டலாம். அவர்களது உழைப்பின் வெளிப்பாடே இந்த மாநாட்டின் வெற்றி!

## 14ஆம் மாநில மாநாட்டு விளக்க கூட்டம்



தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கத்தின் 14 ஆம் மாநில மாநாடு விளக்க கூட்டம் தூத்துக்குடி மாவட்ட சார்பாக மாவட்டத் தலைவர் தோழர் து.செந்தூர் ராஜன் தலைமையில் 22.01.2022 அன்றுநடைபெற்றது. மாவட்டத் துணைத்தலைவர் தோழர் மகேந்திரன் பிரபு வரவேற்புரை மாற்றினார்.

மாநில துணைப் பொதுச் செயலாளர் தோழர் என். வெங்கடேசன் சிறப்புரை வழங்கினார். மாநில மாநாட்டின் நிகழ்வுகளை விளக்கவுரையாக பொதுச் செயலாளர் தோழர் ஆ. செல்வம் அவர்கள் உரையாற்றினார்கள்,

இந்நிகழ்வில் மாநில மையத்திற்கு 1000 உறுப்பினர் சந்தா (மொத்தம் 2000) வழங்கப்பட்டது. தோழர் மு. தமிழரசன் அவர்கள் கூறினார்கள் மாநில செயற்குழு உறுப்பினர் தோழர் து. அண்ணாமலை பரமசிவன் மற்றும் மகளிர் துணை குழு அமைப்பாளர் தோழர் ஆ. மகேஸ்வரி கலந்து கொண்டார்கள். தோழர் மு. தமிழரசன் நன்றியுரையாற்றினார்.

# தேசம் தழுவிய அகில இந்திய வேலை நிறுத்தம் 2022 மார்ச் 28 மற்றும் 29

# ஏன் ? எதற்கு ?

இந்திய நாடு விடுதலை பெற்று 75 ஆண்டுகள் நிறைவடையக்கூடிய நிலையில், நாடு அந்நிய ஆங்கிலேய ஏகாதிபத்திய ஆதிக்க நுகத்தடியை தூக்கி எறிந்து விடுதலை பெற்றால் நாட்டு மக்கள் சுபிட்சமான வாழ்வை பெற முடியும் என்ற நியாயமான எதிர்பார்ப்புடன் கோடிக்கணக்கான இந்திய மக்கள் தாய் நாட்டின் விடுதலைக்கான போராட்ட வேள்வியில் தங்கள் உடல் பொருள், ஆவி அனைத்தையும் துச்சமென துறந்து தங்களை ஈடுபடுத்திக் கொண்டனர். சிறைவாசம், துப்பாக்கி தோட்டாக்கள் , தூக்கு கயிறுகள் என ஆட்சியாளர்கள் கட்டவிழ்த்துவிட்ட எண்ணற்ற அடக்கு முறைகளை ஏந்திக் கொண்டு இந்திய மக்கள் நடத்திய மகத்தான போராட்டத்தின் விளைவாக நாடு 1947 ஆகஸ்ட் 15ஆம் நாள் விடுதலை பெற்றது. ஆனால் இந்த விடுதலை போராட்டத்தில் மகத்தான தியாகங்களை செய்த மக்களின் நியாயமான எதிர்பார்ப்புகள் ஏமாற்றங்களாகவும், நிராசைகளாகவும் மாறிப்போயின. உணவு, உடை மற்றும் இருப்பிடம் ஆகிய அடிப்படைத் தேவைகளைக்கூட அனைத்து மக்களும் பெற, குடிநீர் பெற முடியாத கோடிக்கணக்கான இந்திய மக்கள் அனைவருக்கும் கல்வி என்ற முழக்கம் கொள்கையின் காரணமாக தாழ்த்தப்பட்ட, பிற்படுத்தப்பட்ட குழந்தைகள் கல்வி கற்பது எட்டாக் கனியாக மாறிவிட்டது. அதேபோல் எல்லோருக்கும் வேலை என்ற முழக்கம் காகிதத்தில் எழுதப்பட்ட வார்த்தைகளாய் மாறிப்போனது.

நமது அகில இந்திய மாநில அரசு ஊழியர் சம்மேளனத்தின் முடிவின்படியும், தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கத்தின் 14ஆம் மாநில மாநாட்டின் அறைகூவல் தீர்மானத்தின்படியும், அதேபோல் இந்தியாவில் 10க்கும் மேற்பட்ட தொழிற் சங்கங்கள், பல்வேறு தொழில்வாரி சம்மேளனங்களும் இணைந்து மத்திய அரசின் நாசகர கொள்கைகளுக்கு எதிராக 2022 பிப்ரவரி 23,24 தேசம் தழுவிய பொது வேலை நிறுத்தம் செய்வது என முடிவு செய்யப்பட்டு, நாடு முழுவதும் பிரச்சாரம் மற்றும் கருத்தரங்குகளும் நடைபெற்றுக் கொண்டிருந்த நிலையில், 5 மாநில மற்றும் உள்ளாட்சி தேர்தல்கள் அறிவிக்கப்பட்டதின் காரணமாக மார்ச் 28,29 ஆகிய தேதிகளில் அகில இந்திய வேலை நிறுத்தம் நடைபெறும் என அனைத்து சங்கங்களும் முடிவு செய்து நாடு தழுவிய அளவில் பிரச்சாரம், கருத்தரங்குகளும் தொடர்ந்து நடைபெற்றுக் கொண்டு இருக்கிறது.

### பிரதமரின் பெருமிதமும் தேசத்தின் நிலையும்

இந்தியாவில் ஆழமான பொருளாதார சீர்திருத்தங்களை மேற்கொண்டு வருவதால் உலக நாடுகள் இங்கு முதலீடு செய்ய வேண்டுமென்று உலக பொருளாதார கூட்டமைப்பு மாநாட்டில் பேசிய பிரதமர் நரேந்திரமோடி கூறியுள்ளார்.

ஒரு காலத்தில் இந்தியா உரிமம் ராஜ் என்று அறியப்பட்டதாகவும் ஆனால் தற்பொழுது வரிக்குறைப்பு உட்பட வெளிநாட்டு முதலீட்டாளர்களுக்கு உகந்த சூழல் ஏற்படுத்தப்பட்டுள்ளதாகவும் அவர் கூறியுள்ளார். இந்நிலையில் நவ தாராளமயமாக்கல் என்ற பெயரில் அனைத்து துறைகளையும் அந்நியருக்கு திறந்து விடுவதைத்தான் பிரதமர் பொருளாதார சீர்திருத்தம் என்று வார்த்தைகளால் குறிப்பிட்டுள்ளார். தன்னுடைய அரசின் நடவடிக்கைகளை சர்வதேச பொருளாதார நிபுணர்கள் பாராட்டுவதாக பிரதமர் பெருமிதம் பொங்க குறிப்பிட்டுள்ளார். பொருளாதார

சீர்திருத்தத்தின் மறுபக்கத்தை ஆக்ஸ்பாம் இந்தியா என்ற ஆய்வு நிறுவனம் வெளியிட்டுள்ள தகவல்கள் வெளிச்சம் போட்டு காட்டுகின்றன. கொரோனா பெருந்தொற்று காலத்தில் இந்தியாவில் பெரும் பணக்காரர்கள் எண்ணிக்கை 39லிருந்து அதிகரித்து 142 ஆக உயர்ந்துள்ளது. ஒரு சில பணக்காரர்களின் சொத்து இரு மடங்காக உயர்ந்துள்ளது.(உ.த. கடந்த 5 ஆண்டுகளில் வராக்கடன் 9.54 லட்சம் கோடி தள்ளுபடி ஆனால் திரும்ப வசூலான தொகை 4.14 லட்சம் கோடி மட்டுமே மீட்டியதைவிட இரு மடங்கு தள்ளுபடி) வரிவிதிப்பை குறைத்துள்ளதாக பிரதமர் மோடி கூறுகிறார். ஆனால் GST என்ற பெயரில் சொந்த நாட்டின் மக்களின் வாழ்வாதாரம் சூறையாடப்படுகிறது. மறுபுறத்தில், கார்ப்பரேட் முதலாளிகளுக்கும், பணக்காரர்களுக்கும் முதலீட்டை ஈர்ப்பதாகவும் தொடர்ந்து வரிவிதிப்பு ரத்து செய்யப்படுகிறது.

இந்தியாவின் முதல் 98 கோடீஸ்வரர்களுக்கு ஒரு சதவீதம் வரிவிதித்தால்கூட ஒன்றிய கல்வித்துறைக்கான ஓராண்டு செலவை சமாளிக்க முடியும் என்றும் 4 சதவீதம் வரிவிதித்தால் மதிய உணவு திட்டத்துக்கு தேவையான நிதியை அடுத்த 17 ஆண்டுகளுக்கு வழங்க முடியும் என்றும் ஆக்ஸ்பாம் இந்தியா கூறியுள்ளது. இந்திய பணக்காரர்கள் 10 பேரின் சொத்தை வைத்து 25 ஆண்டுகளுக்கு அனைவருக்கும் இலவசக் கல்வி தர முடியும் என்றும் அந்த அமைப்பு கூறியுள்ளது. தேசிய பணமயமாக்கல் திட்டம் என்ற பெயரில் அனைத்து பொதுத்துறை நிறுவனங்களையும் சூறைபோடும் ஒன்றிய அரசு லாபவெறி கொண்ட கார்ப்பரேட்களுக்கு துணையாக பொதுத்துறை தொழில்களை, நிறுவனங்களை தனியாருக்கு வழங்கி கொண்டிருக்கிறது. இந்த நடவடிக்கை தேசவிரோத, சமூக விரோத நடவடிக்கையாகும். விமானத்தளம், விளையாட்டு மைதானம், பாதுகாப்பு தளவாட தொழில்கள் பெரும் கனரகத் தொழில்கள், சுரங்கங்கள், மின் நிலையம், போக்குவரத்து நிறுவனம், வங்கி, இன்சூரன்ஸ் போன்ற எல்லாவற்றையும் தனியாருக்கு தருகிற செயலில் ஈடுப்பட்டுக் கொண்டிருக்கிறது ஒன்றிய அரசு. இந்த தேசவிரோத நடவடிக்கையை தன்னுடைய சாதனைகளாக உலக அரங்கில் கூறி இன்னும்கூட நாட்டின் சுயசார்பை அழிக்கத் தயாராக இருக்கிறோம் என்று கூறுகிறது. கொரோனா நோய் தொற்று காலத்தில் இந்தியா மிக கவனமாக செயல்பட்டது என்றும், உலக பொருளாதார கூட்டமைப்பு மாநாட்டில் பிரதமர் கூறியுள்ளார். புலம் பெயர் தொழிலாளர்களை நிர்கதியாக விட்டது ஒன்றிய அரசு. சிறுகுறு மற்றும் நடுத்தர தொழில்கள் அழிவை நோக்கி தள்ளப்பட்டன. இதையெல்லாம் மறைத்து ஒரு சில பணக்காரர்களின் வளர்ச்சியை மட்டுமே ஒட்டுமொத்த தேசத்தின் வளர்ச்சியாக படம் காட்டிக் கொண்டு இருக்கிறது ஒன்றிய அரசு.

### இந்தியாவில் பட்டினிச் சாவே இல்லை என்று ஒன்றிய அரசால் கூற முடியுமா? உச்ச நீதி மன்றம் கேள்வி

கடந்த ஆண்டு தமிழ்நாட்டின் விழுப்புரம் மாவட்டத்தில் 5வயது சிறுவன் பட்டினியால் இறந்ததாக அதிர்ச்சி செய்திகள் வெளியாகின. இது தொடர்பாக உச்சநீதி மன்றத்தில் பொது நல வழக்கு தொடரப்பட்டது. அதில் வறுமையில் வாடும் மக்களுக்கு சமுதாய உணவகங்களை ஏற்படுத்தி பட்டினிச் சாவுகளை தடுக்க வேண்டு என்றும் இது குறித்து ஒன்றிய அரசு பதில் அளிக்க உத்திரவிட்டது. இந்தியாவில் பட்டினிச் சாவே இல்லை என மத்திய அரசு தெரிவித்தது அதிர்ச்சியும், ஆச்சரியமும் அடைந்த நீதிபதிகள் நாட்டில் பட்டிச் சாவே இல்லை என்று எப்படி கூற முடியும் என ஒன்றிய அரசுக்கு கேள்வி எழுப்பியது. பட்டினிச் சாவுகள் தொடர்பாக தகவல் சேகரித்து உச்ச நீதி மன்றத்தில் சமர்ப்பிக்க வேண்டுமெனவும் உத்திரவிட்டுள்ளது. இந்தியாவில் பட்டினி சாவு குறித்து ஐக்கிய நாடுகளின் குழந்தைகள் நிதியத்தின் (UNICEF) 2019 ஆம் ஆண்டு வெளியிடப்பட்ட உலகின் குழந்தைகளின் நிலை 2019 என்ற தலைப்பிலான அறிக்கையில் கடந்த 2018 ஆம் ஆண்டில் ஐந்து வயதுக்குட்பட்ட 8 லட்சத்து 82 ஆயிரம் குழந்தை இறப்புகள் இந்தியாவில் பதிவு செய்துள்ளதாகக் குறிப்பிடுகிறது. மேலும் ஊட்டச்சத்து குறைபாடு காரணமாக இந்தியாவில் ஐந்து வயதுக்குட்பட்ட குழந்தைகளில் 69 சதவீதம் பேர் இறந்துள்ளதாக குறிப்பிடுகிறது.

### ஒன்றிய அரசு தடுப்பூசி அரசியல்

கொரோனா பெருந்தொற்றின் மூன்றாவது அலை உலகின் பல்வேறு பகுதிகளில் பரவி

வருகிறது. எனினும் அந்த நோயின் தீவிரம் குறைந்து வருவதாகவும், தடுப்பூசி உள்ளிட்ட நடவடிக்கைகளால் எதிர்ப்பாற்றல் அதிகரித்து வருவதால் இந்நோய் கொஞ்சம் கொஞ்சமாக குறையத் துவங்கிவிடும் என பல்வேறு ஆய்வாளர்கள் கூறுகின்றனர். ஆனால் அதே நேரத்தில் ஒமைக்ரான் உள்ளிட்ட உருமாறிய வைரஸ் குறித்து அலட்சியம் காட்டக்கூடாது என உலக சுகாதார நிறுவனம் எச்சரித்துள்ளது. இந்நோய் நீண்ட காலம் நீடிக்கும் என்றாலும் மற்ற நோய்களைப் போல சாதாரண நோயாக மாறிவிடும் என்கின்றனர் சில மருத்துவர்கள். இந்தியாவில் கொரோனா தடுப்பூசி செலுத்தும் பணி துவங்கி ஓராண்டு நிறைவு பெறுகிறது. இதுவரை 156.76 கோடி தடுப்பூசி போடப்பட்டுள்ளது. வயது வந்தோரில் 70 சதவீதத்திற்கும் அதிகமானோருக்கு தடுப்பூசி செலுத்தப்பட்டுள்ளது என ஒன்றிய அரசு கூறுகிறது. ஒமைக்ரான் பரவலை தொடர்ந்து பூஸ்டர் ஊசி போடும் பணி துவங்கியுள்ளது.

தடுப்பூசி கண்டுபிடிப்பு மற்றும் இலவச விநியோக விஷயத்தில் ஒன்றிய பா.ஜ.க. அரசின் பிடிவாதம் மற்றும் குளறுபடியினால் இந்தியா பல்வேறு பாதகங்களை சந்திக்க நேர்ந்தது. பொதுத்துறை நிறுவனங்களை தடுப்பூசி உற்பத்தி பணியில் ஈடுபடுத்த இப்போதுவரை மோடி அரசு மறுத்து வருகிறது. புனே சீரம் மற்றும் ஹைதராபாத் பயோ டெக் நிறுவனங்களின் தடுப்பூசிகளுக்கு மட்டுமே அனுமதி வழங்கப்பட்டது. அதிலும்கூட ஒரே மருந்துக்கு மூன்று வகையான விலைகளை ஒன்றிய அரசு தீர்மானித்து, துவக்கத்தில் அனைவருக்கும் இலவச தடுப்பூசி என்பதையே மோடி அரசு ஏற்க மறுத்தது. இந்தியாவில் இடதுசாரி கட்சிகளின் தொடர்ச்சியான போராட்டம் சமூகத்தில் ஏற்பட்ட அழுத்தம், உச்ச நீதி மன்றத்தின் வலுவான தலையீடு ஆகியவற்றின் காரணமாக ஒன்றிய அரசு அனைத்து மாநிலங்களுக்கும் தடுப்பூசிகள் இலவசமாக தர முன்வந்தது. அதற்கு முன்பு ஒன்றிய அரசை விட கூடுதலாக விலை கொடுத்து மாநில அரசுகள் தடுப்பூசிகளை வாங்க வேண்டியிருந்தது. இதனால் காலதாமதம் ஏற்பட்டது. இப்போதும்கூட 25 விழுக்காடு தடுப்பூசிகளை தனியார் மருத்துவமனைக்கு ஒன்றிய அரசு ஒதுக்குகிறது. தடுப்பூசியை வீணாக்குவதில் தனியார் மருத்துவனை முதல் இடத்தில் உள்ளன. (உ.த. மதுரை நாடாளுமன்ற உறுப்பினர் தோழர் சு. வெங்கடேசன் அவர்கள் பாராளுமன்றத்தில் கேள்வி எழுப்புகிறார். தனியார் மருத்துவமனைகள், தடுப்பூசியை மக்களுக்கு செலுத்தியதில் எத்தனை சதவீதம், அரசு மருத்துவமனைகள் எத்தனை சதவீதம் என கேள்வி எழுப்பினார். அதற்கு மத்திய சுகாதாரத்துறை அமைச்சர் பதிலளிக்றிhர், அரசு மருததுவமனை மூலம் 97 சதவீதம் தடுப்பூசி செலுத்தப்பட்டுள்ளது. தனியார் மருத்துவமனைகள் 3 சதவீதம் என்றும் கூறப்பட்டுள்ளது.)

இருந்தாலும் தடுப்பூசி உற்பத்தியிலும், விநியோகத்திலும் தன்னுடைய தனியார்மய மோகத்தை விட்டுத்தர ஒன்றிய அரசு தயாராக இல்லை. வளர்ந்த நாடுகளில் பெருமளவு தடுப்பூசி செலுத்தப்பட்டிருந்த நிலையில் மேலும் ஏழை நாடுகளில் தடுப்பூசி செலுத்துவதில் பெரும் இடைவெளி உள்ளது. அமெரிக்கா போன்ற நாடுகள் தடுப்பூசி பதுக்கி வைக்கும் நிலை உள்ளது. இது ஒரு உலகளாவிய தொற்று நோய் என்ற நிலையில் தடுப்பூசி போடும் பணியும் உலக அளவில் நடந்தால்தான் இந்த நோயை முடிவுக்கு கொண்டுவர முடியும். ஆனால் மக்கள் உயிருடன் விலையாடும் முதலாளித்துவம் இதிலும் தன்னுடைய வேலையை காட்டிக்கொண்டிருப்பதுதான் அவலத்தின் உச்சம். உலகிலேயே மிக அதிக தடுப்பூசி செலுத்திய நாடு கியூபா முன்னணியில் இருக்கிறது. தனது மக்களை பாதுகாப்பதற்காக முழுக்க முழுக்க உள்நாட்டிலேயே கண்டுபிடித்து உற்பத்தி செய்யப்பட்ட தடுப்பூசிகளை முழுமையாக பயன்படுத்தியுள்ளது. அதுபோலவே வெனிசுலா, வியட்நாம் இந்நாடுகள் மக்களை பாதுகாப்பதில் முன்னணியில் நின்றதை உலகம் கடந்த ஆண்டு பார்த்திருக்கிறது. உலகிலேயே மிக குறைவான தடுப்பூசி செலுத்தியதில் புருண்டி முதல் நாடாக இருக்கிறது. அதை தொடர்ந்து காங்கோ, தெற்கு சூடான், காட் மற்றும் ஏமன் ஆகிய நாடுகள் மிக குறைவான தடுப்பூசி செலுத்தியுள்ளன.

2021 டிசம்பர் 15 கணக்கின்படி புருண்டியில் மொத்தம் உள்ள 1.20 கோடி மக்களில் 70 சதவீதம் பேருக்கு முமுழுமையாக தடுப்பூசி

செலுத்தி முடிப்பதற்கே 2111 ஜனவரி ஆகிவிடும். எவ்வளவு மோசமான நிலைமை இது...? (உ.த) வளரும் நாடுகளில் மருத்துவத்துக்கு குறைவான ஒதுக்கீடு செய்யும் தேசம் இந்தியா. உலக நாடுகளில் 154வது இடத்தில் இந்தியா உள்ளது. ஜி.டி.பியில் வெறும் 1.25 சதவீதம்தான் செலவு செய்யப்படுகிறது.

### தேசம் காக்கும் போராட்டத்தில் கேரள இடது ஜனநாயக முன்னணி அரசு

பொதுத்துறை நிறுவனங்களை பாதுகாப்பது என்பது லாப-நட்ட கணக்கு பார்க்க வியாபாரம் அல்ல. அது தேசத்தை பாதுகாக்கும் தேசபக்த கடமை. கேரள மாநிலம் காசர்கோடு பெல், இ.எம்.எல். நிறுவனம் மற்றும் கோட்டயம் வெல்லூரில் உள்ள இந்துஸ்தான் நியூஸ் பிரிண்ட் நிறுவனத்தையும் நஷ்டம் எனக்கூறி ஒன்றிய அரசு (மோடி) விற்க முடிவு செய்தது. அதே நேரம் கேரள அரசு அதனை ஏற்று நடத்த தயார் என அறிவித்தது. ஆனால் மோடி அரசு அதனை ஒப்படைக்க மறுத்து ஏலத்திற்கு விட்டது. ஏலத்தில் பங்கேற்ற கேரள இடதுசாரி அரசு இரண்டு நிறுவனங்களையும் காப்பாற்றி தற்பொழுது பொதுத்துறை நிறுவனமாக மாற்றியிருக்கிறது. ஒரு மாநில அரசால் நஷ்டமாகும் பொதுத்துறை நிறுவனத்தை எடுத்து லாபத்தில் இயங்க வைக்க முடியும் எனில் ஒன்றிய அரசால் முடியாதா? இங்கே பிரச்சினை அந்நிறுவனமா அல்லது நிர்வாகத் திறமையின்மையா அல்லது ஒன்றிய அரசு பின்பற்றும் கொள்கையா என்பதை மக்கள் ஆராய்ந்தறிய வேண்டும். ஒன்றிய அரசு வழக்கம்போல் தனது நிர்வாகத் தோல்வியையும், பொருளாதார தோல்வியையும் மூடிமறைக்க இதுவரை பொதுத்துறை நிறுவனங்களை நஷ்டம் எனக்கூறி வந்தது. ஆனால் தற்போது லாபத்தில் இயங்கும் பொதுத்துறை நிறுவனங்களையும் கூறு கட்டி விற்க முனைந்திருக்கிறது. அதற்கு ஒன்றிய அரசு சொல்லும் காரணம் நாடு கஷ்டத்தில் இருக்கிறது. அதனால் பொதுத்துறைகளை பணமாக்கப் போகிறோம் என்கிறது. அது உண்மையா என்றால் அது மிகப்பெரிய பித்தலாட்டமாகவே இருக்கிறது.(உ.த.) சென்ட்ரல் எலக்ட்ரானிக்ஸ் லிமிடெட்(செல்) நிறுவனம் லாபத்தில் இயங்கி வந்த பொதுத்துறை நிறுவனம் ஆகும். அதன் மதிப்பு ரூ.957 கோடியிலிருந்து ரூ.1600 கோடி என மதிப்பிடப்பட்டிருக்கிறது. ஆனால் மோடி அரசு நந்தல் பைனான்ஸ் அண்ட் லீசிங் பிரைவேட் லிமிடெட் என்ற தனியார் நிறுவனத்திற்கு வெறும் ரூ.210 கோடிக்கு மட்டுமே விற்றிருக்கிறது. அந்நிறுவனத்தின் 2020-2021ஆம் நிதியாண்டின் லாபம் மட்டுமே ரூ.136 கோடி. அந்நிறுவனத்தின் கையில் இருக்கும் ஆர்டர்களை மட்டுமே நிறைவேற்றினால் ரூ.730 கோடி கிடைக்கும். இதில் எங்கே இருக்கிறது பணமாக்கல்? மொத்தத்தில் மோடி அரசு பொதுத்துறை நிறுவனங்களைப் பிணமாக்கல் வேலையைத்தான் செய்து வருகிறது என்று பத்திரிகையில் வெளி வருகிறது.

கேரள அரசு மிகவும் வசதி படைத்த அரசு அல்ல. மாறாக 2016 முதல் 2021 வரை இரண்டு மிகப்பெரிய இயற்கைச் சீற்றங்கள் மாநிலத்தின் பொருளாதாரத்தையே நிலை குலையச் செய்தது. அப்போதுகூட ஒன்றிய அரசு போதிய உதவி செய்யவில்லை. அதையடுத்து கொரோனா உள்ளிட்ட பெருந்தொற்ளையும் எதிர்கொண்டு இருக்கிறது. நேர்த்தியான திட்டமிடல், மிக அரிதான வளங்களை முறையாக பகிர்ந்து அளிப்பது, எந்தவொரு பிரிவினரும் வளர்ச்சிப் பாதையில் விடுபடாமல் பார்த்து கொள்வது ஆகிய மூன்றையும் முன்னெடுத்து இந்தியாவிற்கே வழி காட்டுகிறது.

### குறிப்பிடத்தக்க சில முன்னேற்றங்கள்

இத்தகைய கொடிய பாகுபாடுகள் நடைமுறைப்படுத்திய போதிலும் இந்த தருணத்தில் 2022 புத்தாண்டில் மனிதகுலம் சில குறிப்பிட்ட அம்சங்களில் ஒரு முன்னேற்றத்தை எட்டியுள்ளது என்பதை நாம் பெருமிதத்துடன் கூறலாம். இந்திய விவசாயிகளின் துணிச்சல் மிக்க எழுச்சி 3 கொடிய வேளாண் சட்டங்களை தூக்கி எறிய வைத்திருக்கிறது. இந்திய விவசாயிகளின் வாழ் நிலையை சின்னாபின்னமாக்கி சீரழிக்கும் அச்சுறுத்தலை ஏற்படுத்திய சட்டங்களை ஓராண்டு காலம் வலுவான போராட்டத்தை நடத்தி ஒன்றிய அரசாங்கத்தை பணியச் செய்திருக்கிறார்கள் விவசாயிகள். சமீப ஆண்டுகளில் உலகில் மிக வெற்றிகரமாக நடந்து முடிநதுள்ள குறிப்பிடத்தக்க பாட்டாளி வர்க்க வெற்றி.

இந்திய விவசாயிகளின் வெற்றி. இந்திய விவசாயிகளின் இந்த போர் இந்தியாவில் மட்டுமல்ல உலக அளவிலும் கடந்த 10 ஆண்டுக்கும் மேலாக நடந்த முக்கியமான போர்க் குணமிக்க போராட்டங்களில் முதன்மையானது என பத்திரிகைகள் குறிப்பிடுகிறது. அதேபோல் உலகில் அதிக மக்கள் தொகை கொண்ட நாடு சீனா. தங்கள் நாட்டில் நிலவிக் கொண்டிருந்த கடைசி மனிதனின் கொடிய வறுமையையும் முற்றாக துடைத்து எறிந்து இருக்கிறார்கள். கடந்த எட்டு ஆண்டு காலத்தில் வறுமையின் பிடியில் இருந்த 10 கோடி மக்கள் நல்ல நிலைக்கு உயர்த்தப்பட்டு இருக்கிறார்கள். இது இந்த உலகின் நவீன வரலாற்றில் பெருமிதத்துடன் குறிப்பிட்டு செல்ல வேண்டிய மிக முக்கியத்துவம் வாய்ந்த அம்சம்.

அதை தொடர்ந்து பொலிவியா, சிலி, ஹோண்டுரஸ் ஆகிய நாடுகளில் இடதுசாரி அரசாங்கங்கள் ஆட்சி அதிகாரத்திற்கு வந்திருக்கும் மகத்தான நிகழ்வுகள் நடந்துள்ளது. அதாவது இந்த நாடுகளில் கொடிய ராணுவக் கலவரங்கள் நடந்து கொண்டிருந்த இழிவான வரலாற்றை மாற்றி புதிய எழுச்சி ஏற்பட்டிருக்கிறது.(உ.த.) சிலியில் 1973ல் இருந்து ராணுவக் கலவரங்களும், சர்வாதிகார்களின் ஆட்சியும்தான். 2009ல் ராணுவக் கலகம் நடந்து. மக்கள் தெரிவு செய்யப்பட்டட ஆட்சி வீழ்த்தப்பட்டது. பொலிவியாவில் 2019ல் ராணுவக் கலகம் நடந்ததை நாம் பார்த்தோம். ஆனால் இன்றைக்கு அந்த நிலையிலிருந்து ஒரு தாக்குதல் தொடுக்கப்பட்டு இருக்கிறது. பன்முக உலகம் என்ற உயரிய கோட்பாடு வலுவடைந்து வரும் சூழல் உருவாகி இருக்கிறது. இது உலக அரங்கில் அமெரிக்காவின் கட்டுப்பாடு மெல்ல மெல்ல அரிக்கப்படுகிறது என்பதை காட்டுகிறது. இந்த நாடுகளில் அமெரிக்கா என்ன திட்டமிட்டதோ அந்த இலக்கை அடைய முடியவில்லை. அதேபோல் கியூபப் புரட்சியை ஒழித்துக் கட்டுவதற்கும், வெனிசுலாவில் புரட்சிகர நடைமுறையை ஒழிப்பதற்குமான யுத்தத்தை அமெரிக்கா நடத்தி கொண்டிருக்கிறது. இந்த நாடுகளில் எதிர்கட்சிகள் என்று சொல்லிக் கொண்டிருக்கிற வலதுசாரி அமெரிக்கா ஏகாதிபத்திய கைக்கூலிகளை தூண்டிவிட்டு அவர்கள் மூலம் ஆட்சிகளை கவிழ்ப்பது, வன்முறை வெறி ஆட்டத்தை நடத்துவது என்ற அமெரிக்காவின் நடவடிக்கைகளுக்கு மேற்கண்ட நாடுகளில் மக்கள் இடதுசாரிகளை தேர்ந்தெடுத்ததின் மூலம் சரியான பதிலடி அளித்திருக்கிறார்கள். அதுபோல் பிரேசிலும்கூட 2022ல் நடைபெறவுள்ள தேர்தலில் லூலாடிசில்வா, தனக்கு எதிராக வரப்போகிற வலதுசாரி வேட்பாளரை நிச்சயம் தோற்கடிப்பார் என்று அறிகுறி தென்படுவதாக பத்திரிகை செய்திகள் கூறுகின்றன. மக்கள் சக்தி ஆர்பரித்து எழுந்தால் எதையும் சாதிக்க முடியும் என்பதற்கு உதாரணம் ஆப்பிரிக்க கண்டத்தில் அமெரிக்கா மற்றும் பிரான்ஸ் ஆகிய ஏகாதிபத்திய சக்திகளின் ராணுவ முகாம்களுக்கு எதிராக மிகப்பெரிய அளவிற்கு கோபாவேச அலை மக்களிடையே ஏற்பட்டிருக்கிறது. புர்கினோபாசோ நாட்டின் மேற்கத்திய பகுதியிலுள்ள கயா என்ற நகரில் நடந்த நிகழ்வுகள் இதை உறுதி செய்கின்றன. இந்நகருக்கு அருகில் கடந்த நவம்பர் மாதம் பிரெஞ்சு ராணுவ வாகனங்கள் நெருங்கி வந்தபோது அந்நகரின் மக்கள் பெரும் கூட்டமாக அணிதிரண்டு அதற்கு எதிராக போராட்டம் நடத்தி ராணுவ வாகனங்களை தடுத்து நிறுத்திய முக்கிய சம்பவம் நடந்தது. அப்பொழுது அக்கூட்டத்தை கண்காணிப்பதற்காக பிரெஞ்சு ராணுவத்தினர் ஒரு ட்ரோன் கருவியை அனுப்பி இருக்கிறார்கள். அந்த கருவியை 13 வயதே ஆன அவியுசவடோகோ என்ற சின்னஞ்சிறுவன் தனது கவட்டை வில்லால் அடித்து தாக்கி வீழ்த்தி இருக்கிறான். பிரெஞ்சு கோலியாத்தை வீழ்த்தி வரலாறு படைத்துள்ளது.

மேற்காணும் போராட்டங்களினால் உலக முழுவதும் பல்வேறு நாடுகளில் ஏகாதிபத்தியத்திற்கு எதிராகவும், முதலாளித்துவத்திற்கு எதிராகவும் வலுவான போராட்டங்கள் நடைபெற்று கொண்டிருக்கினற் இந்த தருணத்தில் இந்திய நாட்டில் அனைத்து தொழிற் சங்கங்களும், உழைப்பாளி வர்க்கம் இணைந்து இந்திய தேசத்தில் வேலையின்மைக்கு எதிராக, புதிய பென்சன் திட்டம் ரத்து, பொதுத்துறை நிறுவனம் தனியாருக்கு தாரைவார்க்கும் போக்கு, மத்திய மாநில அரசு அலுவலகங்களில் காலிப்பணியிடங்களை நிரப்பிட வேண்டும், அரசுத்துறையில் ஒப்பந்தம், தினக்கூலி, அவுட் சோர்சிங் முறைகளை

கைவிட்டு, சிறப்பு காலமுறை ஊதியம் பெறுபவர்களுக்கு வரையறுக்கப்பட்ட ஊதியம் வழங்குதல், மத்திய அரசு ஊழியர்களுக்கு வழங்கியதுபோல் தமிழக அரசு ஊழியர்-ஆசிரியர்களுக்கு 21 மாத ஊதிய மாற்ற நிலுவைத் தொகை வழங்குதல், சத்துணவு, அங்கன்வாடி, ஆஷா ஊழியர்கள், வருவாய் கிராம உதவியாளர்கள், ஊர்புற நூலகர்கள், எம்.ஆர். பி. செவிலியர்கள், இதர சிறப்பு காலமுறை ஊதியம் பெறுபவர்களுக்கும் குறைந்தபட்ச ஊதியத்துடன் வரையறுக்கப்பட்ட ஊதியம் வழங்குதல், புதிய கல்விக்கொள்கையை கைவிடுதல், அனைத்து தொழிலாளர் விரோத, விவசாய விரோத சட்டங்களை கைவிடுதல்,அத்தியவாசிய பாதுகாப்பு பணிகள் சட்டம் ரத்து செய்தல், விலைவாசி உயர்வை கட்டுப்படுத்திட, பெட்ரோலியப் பொருட்களின் மீதான கலால் வரி குறைத்திடுதல், வருமானவரி செலுத்தாத அனைத்து குடும்பத்திற்கும் ரூ.7500 வழங்குதல், சமவேலைக்கு சம ஊதியம் வழங்கதல், தேசிய பணமாக்கு திட்டத்தை ரத்து செய்தல் உள்ளிட்ட கோரிக்கைகளை வலியுறுத்தி ஒன்றிய அரசின் மக்கள் விரோத, தொழிலாளர் விரோத மற்றும் ஊழியர் விரோத நடவடிக்கைகளை கண்டித்து பல்வேறு கட்ட நடவடிக்கைகளின் வாயிலாக ஒன்றிய அரசின் கவனத்தை கடந்த காலங்களில் பல்வேறு போராட்டங்களின் வாயிலாக கொண்டு சென்ற பிறகும் ஒன்றிய அரசு இந்திய தொழிலாளர்களின் உணர்வுகளை புறக்கணித்து வந்துள்ளது.

இறுதியாக டில்லியில் கூடிய அனைத்து தொழிற்சங்கங்களின் சார்பாக ஒன்றிய அரசின் மக்கள் விரோத மற்றும் தொழிலாளர் விரோத நடவடிக்கையிலிருந்து திரு மோடி அரசு பின்வாங்க வேண்டும் எனவும் இல்லையெனில் வருகின்ற மார்ச் 28,29 இரண்டு நாள் தேசம் தழுவிய வேலை நிறுத்தம் செய்வதென முடிவு எடுக்கப்பட்டது. அதைத்தொடர்ந்து அனைத்து மாநிலங்களிலும் ஒன்றிய அரசின் மக்கள் விரோத கொள்கைகளை கண்டித்து கருத்தரங்கம் அனைத்து தொழிற்சாலைகள், அரசு அலுவலகங்கள் முன்பாக ஒன்றிய அரசின் மக்கள் விரோத நடவடிக்கைகளை கண்டித்து பிரச்சார இயக்கம், வாயில் கூட்டம் நாடு முழுவதும் நடைபெற்றுக் கொண்டிருக்கிறது.

ஆகவே தோழர்களே, அரசமைப்பு சட்டம் வழங்கியுள்ள ஜனநாயக உரிமைகளை பயன்படுத்தும் அதே வேளையில் சட்டப்பூர்வமான நம் எதிர்ப்பினை தெரிவிப்பதுடன், உழைக்கும் மக்களின் அதிகரித்துவரும் நியாயமான ஆவேச உணர்வுகளுக்கு வடிகால் வழங்கிடவும் உழைக்கும் மக்கள் மட்டுமின்றி ஒட்டுமொத்த சமூகத்தின் நலன்களுக்கும் அபாயகரமான கேடு விளைவிக்கும் தவறான கொள்கைகளை உடனடியாக கைவிட வேண்டுமென இந்த தேசம் காக்கும் வேலை நிறுத்தம் அறைகூவல் விடுத்துள்ளது. இந்த அறைகூவலை நமது அகில இந்திய மாநில அரசு ஊழியர் சம்மேளம் முழுமையாக ஏற்றுக்கொண்டு அதன் அடிப்படையில் கருத்தாலும், கரத்தாலும் உழைக்கின்ற உழைப்பாளி மக்களோடு நாமும் இணைந்து நாடு தழுவிய அளவில் விரிவான பிரச்சாரத்தை மேற்கொண்டு இந்திய தொழிற்சங்கங்களின் அறைகூவலின்படி கருத்தரங்கம், பிரச்சாரம், வாயில் கூட்டம் நடத்தி பொருளாதார கோரிக்கைக்கு மட்டும் போராடக்கூடிய அமைப்பு அல்ல. தேசம் காக்கும் அகில இந்திய பொது வேலை நிறுத்தத்தில் தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கம் அனைத்து அரசு ஊழியர்களையும் பங்கேற்கச் செய்வது என முடிவெடுக்கப்பட்டுள்ளது. இது போன்ற அகில இந்திய வேலை நிறுத்தத்தில் கடந்த காலங்களில் 25 கோடிக்கும் மேலான தொழிலாளர்கள், ஊழியர்கள் உள்ளிட்ட உழைப்பாளி மக்கள் பங்கேற்றுள்ளனர்.(கடந்த ஆண்டு 2021 டிசம்பர் 16,17 தேதிகளில் தேசம் முழுவதும் பணிபுரியும் 10 லட்சம் பேர் வங்கி ஊழியர்கள் வேலை நிறுத்தம் செய்தார்கள்) இம்முடிவினை தமிழகத்தில் முழுமையாக அமுல்படுத்துவதன் மூலம் இந்திய உழைப்பாளி மக்களோடு நமது ஒருமைப்பாட்டை முழுமையாக வெளிப்படுத்துவோம். உழைப்பாளி மக்களின் வாழ்க்கையை தாக்கும் ஒன்றிய அரசின் கொள்கைகளை முறியடிக்க ஆர்த்தெழுவோம்.அதற்கான மாபெரும் சூறாவளியாய் எழுவோம்

மார்ச் 28,29ல் வெற்றி பெறச் செய்வோம் அகில இந்திய வேலை நிறுத்தத்தை

"இன்குலாப் ஜிந்தாபாத்" ●

தமிழ்நாடு அரசு ஊழியர் சங்க 14 ஆம் மாநில மாநாட்டில் முதல்வர் பங்கேற்றமைக்கான நன்றி கடிதம்

# நம்பிக்கையை விதைத்ததற்கு நன்றிகள்!

தமிழ் மாநிலத்தின் அனைத்து மக்களின் பெருமதிப்பிற்கும், மரியாதைக்குரிய மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களுக்கு தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கம் என்ற பேரியக்கத்தின் ஒவ்வொரு உறுப்பினரின் சார்பாகவும், 2022-2024 ஆண்டிற்கான இச்சங்கத்தின் புதிய நிர்வாகிகளாக பொறுப்பேற்றுள்ள நாங்கள் எங்கள் உணர்வுபூர்வமான வணக்கங்களை தெரிவித்துக் கொள்கிறோம்.

தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கத்தின் 14ஆம் மாநில மாநாட்டில் கலந்து கொண்டு எங்களையும் எங்கள் இயக்கத்தையும் கௌரவப்படுத்திய உங்களுக்கு நன்றி நவில்கின்றோம். தமிழ்நாட்டின் அனைத்து அரசுத்துறைகளிலும் பணிபுரியும் ஊழியர்களின் பாதுகாவலனாக இந்த இயக்கம் இருப்பதை இன்னொருமுறை இவ்வுலகிற்கு உறுதிப்படுத்தியுள்ளது உங்கள் வருகை, அதற்கு நன்றிக் கடன் பட்டிருக்கிறோம்.

"எந்த கோரிக்கையையும் நிறைவேற்றாத நிலையில் எப்படி வருவார் மாநாட்டுக்கு?" என்று ஏளனம் பேசியவர்கள் சிந்தை சிதறி பொடிபட மாநாட்டில் கலந்து கொண்டு, தந்தையையும் விஞ்சிய தனித்துவத்தை தரணிக்கு உணர்த்திய தங்களின் முன்னெடுப்புக்கு முழுதான நன்றிகளை உரித்தாக்குகிறோம்.

வந்ததற்காகவாது நிலுவை கோரிக்கைகளில் ஒன்றையேனும் அறிவித்து அனைவரையும் மகிழ்விப்பார் என்ற ஆவலோடு காத்திருந்த லட்சக்கணக்கான ஊழியர்கள், வேகத்தோடு வந்து சோகத்தோடு திரும்பிப் போனாலும் அவர்கள் ஒவ்வொருவரின் மனதிலும் புது நம்பிக்கையை ....... நான் இருக்கிறேன் உங்கள் கோரிக்கைகள் அனைத்தையும் நிறைவேற்றித் தருகிறேன்.... என்ற புத்துணர்வு நம்பிக்கையை விதைத்திருக்கிறீர்கள் நீங்கள். அதற்காக உங்களுக்கு நன்றி சொல்ல இன்னும் கடமைப்பட்டிருக்கிறோம்.

“அரசு ஊழியர்கள் தான் அரசாங்கம்” என்னை திரும்பிப் பார்க்க வைக்க வேண்டிய அவசியம் உங்களுக்கு இல்லை, ஏனென்றால் “நான் உங்களில் ஒருவன்” என்றெல்லாம் விண்ணதிர நீங்கள் உதிர்த்திட்ட ஒவ்வொரு வார்த்தையும் ஒவ்வொரு அரசு ஊழியரின் நெஞ்சிலும் எழுதப்பட்ட செப்பேடுகளாய் நிற்கின்றன.

அரசு ஊழியர்கள் வரலாற்றில் பத்தாண்டு கால இருண்ட ஆட்சி மறைந்து ஆறு மாத காலமாக மக்களின் மனசாட்சி ஆட்சி செய்து கொண்டிருக்கிறது. ஆட்சிப் பொறுப்பேற்றதில் இருந்து ஏதாவது ஒரு நெருக்கடி அரசாங்கத்திற்கு வந்துகொண்டிருந்ததாலும், நிதி நிலைமை மிக மோசமாக இருப்பதாலும் அரசு ஊழியர்களுக்கு கொடுத்த வாக்குறுதிகள் நிறை வேற்றப்படாமல் உள்ளது. ஆனால் அவை அனைத்தும் கண்டிப்பாக நிறைவேற்றப்படும் என்ற தங்களின் வெளிப்படையான பேச்சு யதார்த்தமானது என்பதை அறிவோம். அதனால்தான் எங்கள் உரிமைகளுக்காகவும் சலுகைகளுக்காகவும் பொறுமையுடன் காத்திருக்கிறோம். எங்கள் கோரிக்கைகள் அனைத்தையும் ஒரே நாளில் தங்களால் நிறைவேற்ற முடியாது என்கிற யதார்த்தத்தை நாங்கள் உணர்ந்தே இருக்கிறோம். அப்படி நிறைவேற்றக் கோருவதும் நியாயமானதாக இருக்காது என்பதையும் நாங்கள் தெரிந்தே இருக்கிறோம். அதே சமயம் கோரிக்கைகளில் சிலவற்றை ஒரு குறிப்பிட்ட கால இடைவெளியில் தாங்கள் நிறைவேற்றி அரசாணை வெளியிட வேண்டுகிறோம். இதன்மூலம் அரசாங்கத்தின் சுமைகள் கொஞ்சம் கொஞ்சமாக குறைவதோடு அரசு ஊழியர்கள் அரசுப் பணிகளிலும் மக்கள் திட்டப்

பணிகளிலும் இன்னும் ஊக்கத்துடனும் உற்சாகத்துடனும் செயல்படுவார்கள் என்பதையும் அரசாங்கம் முன்னேற்றப் பாதையில் முழு வீச்சில் பயணிக்க அரசு ஊழியர்கள் மேலும் உழைப்பார்கள் அரசுடன் துணை நிற்பார்கள் என்ற உறுதியையும் நாங்கள் தங்களுக்குத் தெரிவிக்க கடமைப் பட்டிருக்கிறோம். தமிழ்நாடு அரசு ஊழியர் சங்க மாநாட்டில் பல்வேறு துறைகளில் பணிபுரியும் அரசு ஊழியர்களின் கோரிக்கைகள் தொகுக்கப்பட்டு அதை ஒரு கையேடாக மாண்புமிகு முதல்வரிடம் மாநாட்டு மேடையிலேயே வழங்கப்பட்டது, அதை மாண்புமிகு முதல்வர் பெற்றுக்கொண்டதோடு அவற்றை பரிசீலிப்பதாக மேடையிலேயே உறுதியளித்தது, மாநாட்டுக்கு வந்திருந்த அரசு ஊழியர்களை உற்சாகமூட்டியுள்ளது. மேற்படி கோரிக்கைகளில் நிதிச்சுமை சாராத கோரிக்கைகளின் பேரில் முடிவெடுத்து நடவடிக்கை மேற்கொள்வதில் அரசுக்கு எந்தவித இடர்ப்பாடும் ஏற்பட வாய்ப்பில்லை. எனவே, தற்போதுள்ள சூழ்நிலையில் தமிழக முதல்வர் அவர்கள் உடனடியாக நிதிச்சுமை இல்லாத நிர்வாக கோரிக்கைகளின் மீது உரிய முடிவெடுத்து நடவடிக்கைகள் மேற்கொண்டால் அரசு ஊழியர் சமுதாயம் இந்த அரசுக்கு நன்றிக்கடன் பட்டதாக இருக்கும் என்று தெரிவித்துக் கொள்கிறோம். பிறக்கின்ற புத்தாண்டில் நல்லதொரு அறிவிப்புகள் வெளிவரும் என்று அனைத்துத் தரப்பு அரசு ஊழியர்களும் எதிர்பார்த்து காத்துக் கொண்டிருக்கும் நிலையில் அந்த அறிவிப்புகள் நிச்சயம் வெளியாகும் என்ற அசைக்க முடியாத நம்பிக்கையில் அதற்கான நன்றிகளை முன்கூட்டியே இப்போதே இந்த நன்றி நவிலலுடன் சேர்த்து தெரிவித்துக் கொள்கிறோம். ●

# வரவேற்புக்குழு நிறைவு கூட்டம்

தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கத்தின் 14ஆம் மாநில மாநாட்டின் வரவேற்புக்குழு நிறைவு கூட்டம் 11.01.2022 அ;னறு வடசென்னை மாவட்டத் தலைவர் தோழர் ப. சுந்தரம்மாள் தலைமையில் நடைபெற்றது. தோழர் ரேணுகாதேவி அனைவரையும் வரவேற்றார். மாநாட்டு பணிகள் குறித்து வரவேற்புகுழுச் செயலாளர் தோழர் சா. டானியல் ஜெயசிங் அவர்களும், வரவு-செலவு குறித்து நிதிக்காப்பாளர் தோழர் ம. அந்தோணிசாமி அவர்களும் உரையாற்றினர்.

தமிழ்நாடு அனைத்துத்துறை ஓய்வூதியர் சங்கத்தின் மாநிலத் தலைவர் தோழர் நெ.இல. சீதரன் தொடக்கவுரையாற்றினார். இக்கூட்டத்தில் தோழமைச் சங்கத் தலைவர்கள் தோழர்கள் வி. சோமசுந்தரம், மாநிலப் பொருளாளர், தமிழ்நாடு வருவாய்த்துறை அலுவலர் சங்கம், சி. கலைச்செல்வி, மாநில துணைத்தலைவர், தமிழ்நாடு வணிகவரிப் பணியாளர் சங்கம், ரெ. காயாம்பூ, மாநிலத் தலைவர், தமிழ்நாடு நில அளவை அலுவலர்கள் ஒன்றிப்பு, தெ. வாசுகி, மாநிலத் தலைவர், இந்துசமய அறநிலையத்துறை ஆட்சி அலுவலர்கள் சங்கம், ஆ. பெரியாசமி, மாநில துணைத் தலைவர், தமிழ்நாடு சத்துணவு ஊழியர் சங்கம்,ஆ. அம்சராஜ், பொதுச்செயலாளர், தமிழ்நாடு நெடுஞ்சாலைத்துறை சாலைப்பணியாளர் சங்கம், என். இமேஷ், பொதுச்செயலாளர், தமிழ்நாடு தொழிற்பயிற்சி அலுவலர் சங்கம், உ. சுமதி, மாநில துணைத்தலைவர், தமிழ்நாடு வேளாண்மைத்துறை அமைச்சுப்பணியாளர் சங்கம்,வீ. பார்த்தசாரதி, பொதுச்செயலாளர், தமிழ்நாடு அரசு மருத்துவ ஆய்வக நுட்பனர் சங்கம், இரா.ந. நம்பிராஜன், பொதுச்செயலாளர், தமிழ்நாடு மருத்துவத்துறை நிர்வாக ஊழியர் சங்கம், க. துரைசிங், பொதுச்செயலாளர், தமிழ்நாடு சமுகநலத்துறை பணியாளர் சங்கம்,ஆ. ரெங்கசாமி, பொதுச்செயலாளர், தமிழ்நாடு நெடுஞ்சாலைத்துறை ஊழியர் சங்கம், முன்னாள் மாநில துணைத்தலைவர் கோ. சுகுமார், வை. சிவக்குமார், சீனிவாசலு, ஜெ. சரஸ்வதி, தலைவர், மாநகராட்சி சுகாதார செவிலியர் சங்கம், மற்றும் ஜாக்டோ-ஜியோ மாநில ஒருங்கிணைப்பாளர்கள் இரா. தாஸ், கு. வெங்கடேசன், ஆர். பெருமாள்சாமி, பேராசியர் ஜெ. காந்திராஜன், கு. தியாகராஜன், ஆகியோர் வாழ்த்துரை வழங்கினர்.

மாநிலத் தலைவர் மு. அன்பரசு, பொதுச்செயலாளர் ஆ. செல்வம் ஆகியோர் வரவேற்புக்குழுவில் பணியாற்றிய அனைவரையும் பாராட்டி பேசினர். இக்கூட்டத்தில் பங்கேற்ற தலைவர்கள் மற்றும் வரவேற்புக்குழு தோழர்களுக்கு நினைவு பரிசுகள் வழங்கப்பட்டது. வரவேற்புக்குழுவின் சார்பில் வடசென்னை மாவட்டப் பொருளாளர் தோழர் டி. ஏழுமலை நன்றி கூறினார்.

கட்டுரை

# மீண்டும் ஒரு புரட்சிக்கு தயாராகுவோம்

- சி. பரமேஸ்வரி

இந்தியாவில் சுமார் 200 நுற்றாண்டுகளுக்கும் மேல் நீடித்து வந்த ஆங்கில ஆட்சியை முடிவுக்கு கொண்டுவரும் நோக்கில் தேசிய அளவிலும், மாநில அளவிலும் பல கழகங்களையும், புரட்சிகளையும், அகிம்சை வழியில் பலபோராட்டங்களையும் நிகழ்த்தி, தன்னுடைய குருதிகளையும் உயிரையும் தமது தாய் நாட்டிற்காக அர்பணித்த தேசத்தலைவர்களையும் வீரர்களையும், புரட்சிகளையும் நினைவு கூறும் நாள் (குடியரசு தினம்) ஆகும். ஆரம்ப காலத்தில் நமது மன்னர்கள் ஒற்றுமையாக இல்லாமல் இந்தியாவை சிறு சிறு மாநிலங்களாக பிரித்து ஆட்சி செய்து கொண்டிருந்ததால், வணிகம் செய்வதற்காக இந்தியாவில் நுழைந்த பிரிட்டிஷ்காரர்கள் படிப்படியாகத் தங்களுடைய ஆதிக்கத்தை ஏற்படுத்தி, இந்தியா முழுவதும் கொடுங்கோல் ஆட்சியை அரங்கேற்றினார்கள் அத்தகைய கொடுங்கோல் ஆட்சியை முடிவுக்கு கொண்டு வந்து 1947 ம் ஆண்டு ஆகஸ்ட் 15 ம் நாள் இந்தியா விடுதலைப்பெற்றது. இந்திய விடுதலைக்கு பிறகு மக்களாட்சி மட்டுமே ஒரு நாட்டின் சிறப்பான வளர்ச்சிக்கு அடையாளம் என கருதி, டாக்டர் பி.ஆர் அம்பேத்கர் தலைமையில் இந்திய அரசியல் சட்டம் நிறைவேற்றப்பட்டு, 1950 ம் ஆண்டு ஜனவரி 26 முதல் குடியரசு தினமாகக் கொண்டாடப்படுகிறது. மேலும் அத்திருநாளில் நமது தாய் நாட்டினை அந்நியர்களின் பிடியிலிருந்து காப்பாற்றி பாரத மண்ணில் ஒவ்வொரு மனிதனும் சுதந்திரக் காற்றை சுவாசிக்கப் பாடுபட்ட தியாகிகளை நினைவுக்கூறும் வகையில் விடுமுறை அளிக்கப்பட்டு கல்லூரிகளிலும், அலுவலகங்களிலும் தேசிய கீதம்பாடி கொடியேற்றி, இனிப்புகள் வழங்கி கொண்டாடப்படுகிறது.

குடியரசு தினத்தன்று இந்தியக் கொடியில் மலர்களைப் பொதித்து வைத்து உயரமான கம்பத்தின் உச்சியில் அதனைக்கட்டி பின் விழாவின் போது கொடி கயிற்றை இழுத்து பல வண்ணப்பூக்கள் பொழிய பட்டொளி வீசி இந்திய மூவர்ணக் கொடியை பறக்க விட்டு அனைவரும் பரவசப்படும் நாள் உலக நாடுகள் ஒரே ஒரு முறை சுதந்திரம் பெற்ற நாளை மட்டுமே கொண்டாடும் போது இந்தியர்களாகிய நாம் இருமுறை கொடியேற்றி இறக்கிக் கொண்டுள்ளோம். இன்று நம் நாட்டின் ஆயுத பலத்தை காட்டும் விதத்தில் படை அணிவகுப்பு, இந்தியத் தலை நகரில் நடைபெறும். ஆனால் இவ்வாறு சிறப்பாக கொண்டாடப்பட்டு கொண்டிருக்கும் குடியரசு தினம் இன்று தலைகீழாக மாற்றப்பட்டுள்ளது. இந்திய அரசியல் சாசனத்தை மதிக்காத அரசு 13 மாநிலங்களைத் தவிர மற்ற மாநில அரசுகளின் சுதந்திர போராட்ட ஊர்திகள், தலைவர்களின் கலாச்சார உருவங்களும் நிராகரிக்கப்பட்டுள்ளது. அம்மாநில அரசுகளின் அதிகாரங்களை ஆளுநர் கையில் எடுத்து கொண்டு நேரடியாக ஆட்சி பணிகளில் தங்களை ஈடுப்படுத்திக்கொண்டு மக்களால் தேர்வு செய்யப்பட்ட முதலமைச்சர்களை புறகணிக்கப்பது(உதாரணம்: புதுச்சேரி, ராஜஸ்தான், தமிழ்நாடு, கேரளம்..) ஜனநாயக முறைப்படி தேர்வுசெய்யபட்டவர்களை ஆட்சி அமைக்க விடாமல் குதிரை பேரம், பணம், மாஃபியா மூலம் குறைந்த எண்ணிக்கையுள்ள தங்கள் நபர்களைக் கொண்டு மாநில ஆட்சியை கையகப்படுத்துவது போன்ற ஜனநாயகத்தை படுகொலை செய்யும் நிகழ்வுகள் அறங்கேற்றி வருகிறது. முதலாம் மற்றும் இரண்டாம் உலகப்போர்கள் உட்பட ஏராளமான ஆயுத மோதல்கள், போர்களின் நினைவுச் சின்னங்கள் இந்தியாவிலும், வெளிநாடுகளிலும் 20 போர்

சின்னங்கள் உள்ளன. ஒவ்வொரு நினைவு சின்னங்களுக்கும், தனித்தனி நோக்கங்களும் வரலாற்று பிண்ணனிகளும் உண்டு.1971 இந்திய பாகிஸ்தான் போரில் உயிர் நீத்த 1400 தியாகிகளின் நினைவாக அமர்ஜவான் ஜோதி கட்டப்பட்டு 1972இல் திறந்து வைக்கப்பட்டது. அந்த நினைவிடத்தில் செங்குத்தாக நிறுத்தப்பட்டு இருக்கும் டுஐயு.1 தானியங்கி ரைபிலும் அதன் பாய்நெட்டும் அதன்மேல் இருக்கும் தொப்பியும் ஜெசோர் செட்டாரில் போரிட்டு மரணம் அடைந்த இந்திய வீரரின் நினைவாக வைக்கப்பட்டுள்ளது. இதன் அருகே எரிந்து கொண்டு இருந்த அணையா ஜோதியை 21.10.2022 அன்று ஒன்றிய அரசு அணைத்துவிட்டது.நினைவு சின்னம் மட்டும் அங்கேயே உள்ளது. இந்த நடவடிக்கை வரலாற்றையும், அதன் நோக்கத்தையும் சீர்குலைக்கும் எதேச்சதிகார செயலாகும். இந்தியா கேட்டில் உள்ள அமர்ஜவான் ஜோதிசுடர் அணைக்கப்படவில்லை. போராடி பெற்ற சுதந்திர வீரர்களின் தியாகங்கள் சுதந்திர போராட்ட வரலாற்றை சிதைக்கும் நிலையாகும்.

நாட்டின் பெருமைமிகு வரலாற்றை, தியாகங்களை, போராடிய வீரர்களை உண்மையாகப் போற்றி பாதுகாக்கும் உன்னத உணர்வு இதுதான். சுதந்திர போராட்ட வேள்விக்கு தங்களை தந்து கருகிய தியாக சீலர்களால் பிறந்தது தான் இந்திய சுதந்திரம். இந்த வரலாற்றிற்கு தொடர்பு இல்லாத இந்த மாண்புகள் இல்லாதவர்களிடம் இந்த மாண்புகளை எதர்பார்க்க முடியாது தான். தேசப்பற்றையும், தேசிய வெறியையும் இனம் பிரிக்கும் கோடு மிக மெல்லியது. இதை கவனமாக கண்டறிந்து வேறுபடுத்தி பெற்ற சுதந்திரத்தை பேணிக்காக்க மீண்டும் ஒரு புரட்சிக்கு தயாராக வேண்டும். அப்புரட்சிக்கான காலம் வெகுதொலைவில் இல்லை. நாம் அனைவரும் ஒன்றாக இணைந்து நம் சுதந்திரத்தை காப்பதற்கும் வருங்கால சந்ததியினரின் வாழ்வாரதத்தை மீட்பதற்கும் நாம் போராடி பெற்ற சலுகைகளை மீட்பதற்கும் 2024-ல் மீண்டும் ஒரு விரல் புரட்சி செய்து மீட்டெடுக்க தயாராவோம்.

●

# சைபர் கிரைம்
## விழிப்புணர்வுக் கூட்டம்



தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கம் நாகப்பட்டினம் மாவட்ட மையம் சார்பில் சைபர் கிரைம் குறித்து விழிப்புணர்வு கூட்டம் தமிழ்நாடு அரசு ஊழியர் சங்க கூட்ட அரங்கில் இன்று (26.01.22) தோழர் பா. ராணி, மாவட்டத் தலைவர் தலைமையில் நடைபெற்றது. நாகை வட்டச் செயலாளர் தோழர் ஏ.அற்புதராஜ் ரூஸ்வெல்ட் வரவேற்புரையாற்றினார். மாவட்டச் செயலாளர் தோழர் அ.தி.அன்பழகன் அறிமுக உரை நிகழ்த்தினார். மாநிலச் செயலாளர் தோழர் சா.டானியல் ஜெயசிங் துவக்கவுரையாற்றினார். நாகப்பட்டினம் சைபர் கிரைம் காவல் நிலைய உதவி ஆய்வாளர் திரு. திருக்குமரன் மற்றும் தலைமைக் காவலர் திரு.முருகதாஸ் ஆகியோர் ஆன்லைன் பரிவர்த்தனை, முகநூல், வாட்ஸ்அப் உள்ளிட்டவற்றில் நடைபெறும் முறைகேடுகள் அவற்றை தடுக்கும் முறைகள் மற்றும் புகார் தெரிவிக்கும் விதம் உள்ளிட்டவை குறித்து சிறப்புரையாற்றினார்கள். பின் வந்திருந்தவர்கள் எழுப்பிய சந்தேகங்களுக்கு உரிய பதில் வழங்கினர். இறுதியாக மாவட்டத் தணிக்கையாளர் தோழர் வி.எஸ்.இராமமூர்த்தி நன்றியுரையாற்றினார்.

கட்டுரை

# கூட்டுறவுத் துறைக்கு தனி அமைச்சகம் - அறிவிப்பின் பின் உள்ள அபாயங்கள்

**- இரா.மங்களபாண்டியன்**

இந்திய அரசின் வேளாண்மைத் துறை அமைச்சகத்தில் ஒரு பிரிவாக இருந்த கூட்டுறவுத் துறையை தனியாகப் பிரித்து 'கூட்டுறவு அமைச்சகம் (Ministry of Cooperation)" என்ற பெயரில் ஒன்றிய உள்துறை அமைச்சர் அமித்ஷாவிற்கு கூடுதல் பொறுப்பாக வழங்கி தனி அமைச்சகத்தை மத்திய அரசு ஏற்படுத்தியுள்ளது. இதன் கீழ் தேசிய அளவிலான கூட்டுறவு நிறுவனங்கள், பல மாநில கூட்டுறவு சட்டத்தின் கீழ் பதிவு செய்யப்பட்ட நிறுவனங்கள், தேசிய கூட்டுறவு வளர்ச்சி நிறுவனம், தேசிய அளவிலான கூட்டுறவு பயிற்சி நிறுவனங்கள் ஆகியவை வருகின்றன.

நாட்டில் உள்ள கூட்டுறவு அமைப்புகளை அதிக அதிகாரம் உள்ளதாக மாற்றுவதில் அரசு உறுதியாக உள்ளது. மேலும், கூட்டுறவு அமைப்புகளையும் வலுப்படுத்த திட்டமிட்டுள்ளது. இதன் பலன் கீழ்மட்டத்தில் உள்ள கூட்டுறவு அமைப்புகளையும் சென்றடையும், இதில் இப்கோ போன்ற கூட்டுறவு அமைப்புகள், மாநில அளவிலான கூட்டுறவு அமைப்புகளுடன் மாநாடு ஒன்றை ஏற்பாடு செய்தால், அதில் கூட்டுறவு அமைப்புகள் சந்திக்கும் பிரச்சனைகளை விவாதிக்கலாம். அதே போல், வேளாண் உற்பத்தியாளர் அமைப்புகளுக்கு அளிக்கப்படும் சலுகைகளும் பலன்களும் தொடக்க வேளாண்மை கூட்டுறவு அமைப்புகளுக்கும் வழங்கப்படும் என்று அமித்ஷா கூறுகிறார்.

ஆனால் தனி அமைச்சகத்தின் முயற்சிக்கு கூட்டுறவு சங்கங்கள் மத்தியில் கடும் எதிர்ப்பு கிளம்பியுள்ளது. 'கூட்டுறவு அமைப்புகள் பாதுகாக்கப்பட வேண்டும் என்ற நோக்குடன் தன்னாட்சி பெற்ற அமைப்புகளாக திகழ வேண்டும் என்பதற்காக ஐக்கிய முற்போக்கு கூட்டணி ஆட்சிக்காலத்தில் அரசியலமைப்பு சட்டத்தில் 97வது திருத்தம் கொண்டு வரப்பட்டது. ஆனால் அதற்கு நேர்மாறாக நகர கூட்டுறவு வங்கிகளை சட்டத் திருத்தம் மூலம் வங்கி ஒழுங்குமுறை சட்டத்தின்கீழ் இந்திய அரசு கொண்டுவந்துள்ளது. கூட்டுறவுத் துறை என்பது மாநில அரசின்கீழ் உள்ள துறையாகும். தனி அமைச்சகத்தை உருவாக்குவது தொடர்பாக மாநில அரசுகளின் ஒப்புதலைப் பெறாமலேயே மத்திய அரசு அறிவித்துள்ளது. இதனால் மாநில அரசின் உரிமைகளும் அதிகாரமும் பறிபோகும் நிலை ஏற்பட்டுள்ளது. இது கூட்டாட்சி முறைக்கு நேர் எதிரானது.

மேலும் 'நாடு முழுவதும் உள்ள பொதுத்துறை வங்கிகள் பெரும் சவால்களை சந்தித்து வருகின்றன. வாராக்கடன் என்பது தொடர்ந்து அதிகரித்துக் கொண்டே வருகிறது. வங்கிகளில் முதலிடத்தில் உள்ள பாரத ஸ்டேட் வங்கியில் கடன் பெற்ற 685 பேர் செலுத்த வேண்டிய கடன் பாக்கி தொகை மட்டும் 43,887 கோடி ரூபாய். பஞ்சாப் நேஷனல் வங்கியில் 325 பேருக்கும் மேல் 200 கோடி ரூபாய்க்கும் மேலாக கடன்பெற்று திருப்பிச் செலுத்தாமல் உள்ளனர். மேலும் 'வாராக்கடன் நஷ்டம்" எனக் கூறி வங்கிகளை கலைத்தும் இணைத்தும் வருகிறார்கள்.

தற்போது இந்திய அரசின் கவனம் முழுவதும் கூட்டுறவு நிறுவனங்கள் மீது திரும்பியுள்ளது. நாடு முழுவதும் உள்ள 1 லட்சத்து 10 ஆயிரத்துக்கும் மேற்பட்ட கூட்டுறவு நிறுவனங்களில் 12 லட்சம் கோடி ரூபாய் வைப்புத் தொகை உள்ளது. கேரளாவில் மட்டும் 80 ஆயிரம் கோடி ரூபாய் வைப்புத் தொகை உள்ளது.

நாடு முழுவதும் உள்ள நகர கூட்டுறவு வங்கிகளில் 8.6 கோடி வைப்பீட்டாளர்களின் வைப்பீடு தொகை மட்டும் 4.85 லட்சம் கோடி. இது போன்று அனைத்து கூட்டுறவு

நிறுவனங்களில் உள்ள வைப்பீடுகளை காலி செய்வதற்காகவே கூட்டுறவுக்கு என்று தனி அமைச்சகத்தை இந்திய அரசு உருவாக்கியுள்ளதாக அச்சப்பட வேண்டியுள்ளது.

மேலும், 'கூட்டுறவுத் துறை என்பது இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின் ஏழாவது அட்டவணையில் மாநில அரசின் கட்டுப்பாட்டில் உள்ளதை உறுதி செய்துள்ளது. ரிசர்வ் வங்கி ஏற்கனவே வாராக்கடன் குறித்து மத்திய அரசை எச்சரித்துள்ளது. இந்நிலையில் கூட்டுறவு நிறுவனங்களில் உள்ள வைப்புத் தொகையினை கார்ப்பரேட்டுகளுக்கு வாரி வழங்குவதற்காக மாநில உரிமையை பறித்து கூட்டுறவு நிறுவனங்களை தங்களது கட்டுப்பாட்டில் கொண்டு வருவதற்கு இந்திய அரசு முடிவெடுத்துள்ளது. இது கூட்டுறவின் தன்னாட்சி அமைப்பை தகர்க்கவே செய்யும். இதனால் அடுத்து வரும் நாள்களில் மக்களின் சேமிப்புக்கான வட்டி விகிதங்கள் குறைக்கப்படலாம். மேலும், கூட்டுறவு நிர்வாகங்களில் இந்திய அரசின் பிரதிநிதிகள் பங்கேற்கும் அபாயம் ஏற்படும். இதனால் கூட்டுறவு அமைப்புகள் தொடங்கப்பட்டதன் நோக்கம் முற்றிலுமாக சீரழியும்"

'கூட்டுறவு இயக்கம் என்பத 150 ஆண்டுகால வரலாற்றினை கொண்டது. இந்தியாவிலேயே முதன் முதலாக திருவள்@ர் மாவட்டத்தில் உள்ள 'திரூர்" கிராமத்தில்தான் முதல் கடன் சங்கம் தோற்றுவிக்கப்பட்டது. அதே போன்று முதல் நகர கூட்டுறவு வங்கியும் 1904 ஆம் ஆண்டு காஞ்சிபுரத்தில் தொடங்கப்பட்டது. ஏழை எளிய மக்கள் தங்களது கடன் தேவையை பூர்த்தி செய்து கொள்ளவும் நீண்ட காலமாக மக்களின் உணர்வுடன் ஒன்றிணைந்து கூட்டுறவு இயக்கம் செயல்பட்டு வருகிறது. நாடு முழுவதும் உள்ள 1,482 நகர கூட்டுறவு வங்கிகளையும் 58 மாநில கூட்டுறவு வங்கிகளையும் ரிசர்வ் வங்கி ஒழுங்குமுறை சட்டத்தின் கீழ் கொண்டு வருகிறோம் எனவும் இதனால் கூட்டுறவு வங்கியில் நடைபெறும் முறைகேடுகளை களையவும், வைப்பீட்டாளர்களின் பாதுகாப்பையும் உறுதிப்படுத்தவே சட்டம் கொண்டு வரப்பட்டதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஏற்கனவே நகர கூட்டுறவு வங்கிகள் அனைத்தும் ரிசர்வ் வங்கியின் அனுமதி பெற்றுத்தான் செயல்படுகின்றன. மேலும் ரிசர்வ் வங்கியின் மேற்பார்வையும் ஆய்வும் தொடர்ந்து நடைபெற்று வருகிறது. ஏதோ இப்போதுதான் நகர கூட்டுறவு வங்கிகளின் கண்காணிப்பை தீவிரப்படுத்த உள்ளோம் என்பதெல்லாம் வெளி உலகுக்கு மட்டுமே சொல்லப்படுகிறது. ரிசர்வ் வங்கியின் கட்டுப்பாட்டின் கீழுள்ள பொதுத்துறை வங்கிகளில் 2019 ஏப்ரல் முதல் செப்டம்பர் வரை ஆறு மாத காலத்தில் நடைபெற்ற மோசடிகளால் ஏற்பட்ட நஷ்டம் என்பது ரூ.5,743 கோடியாக உள்ளது. நாட்டில் அதிக கிளைகளைக் கொண்ட பாரத ஸ்டேட் வங்கியில் கடந்த சில ஆண்டுகளில் மட்டும் ரூ.25,400 கோடி ஊழல் நடைபெற்றுள்ளது. பஞ்சாப் நேஷனல் வங்கியில் ரூ.10,800 கோடி மோசடி அரங்கேறியது. பேங்க் ஆ‡ப் பரோடாவில் ரூ.8,300 கோடி இழப்பு ஏற்பட்டுள்ளது. 2018 ஆம் ஆண்டில் மட்டும் வங்கிகளில் நடைபெற்ற 5916 மோசடிகளால் ரூ.41167 கோடி ரூபாய் இழப்பு ஏற்பட்டுள்ளது. ஒவ்வொரு ஆண்டும் வங்கிகளில் மோசடிகள் என்பது 15 சதவீதம் உயர்ந்து கொண்டே இருக்கிறது.


தனியார் வங்கியில் முதன்மை வங்கியாக இருந்த யெஸ் வங்கியும் திவாலாகிவிட்டது. மேலும் இந்திய அரசு அறிவித்த முத்ரா கடன் திட்டத்தின்கீழ் வழங்கப்பட்ட கடன்களில் தொடர்ந்து வாராக்கடன் அதிகரித்துக் கொண்டே இருக்கிறது என ரிசர்வ் வங்கியின் முன்னாள் ஆளுநர் ரகுராம்ராஜனும் எச்சரித்திருந்தார். அடுத்தடுத்து வந்த ரிசர்வ் வங்கி ஆளுநர் உர்ஜித் பட்டேல் பதவியிலிருந்து விலகிய பின், உத்தரவாதம் இல்லாமல் கடன் வழங்குவது சிக்கலை உருவாக்கும் எனக் கூறியிருந்தார். இதையெல்லாம் தடுப்பதற்கு ரிசர்வ் வங்கி நடவடிக்கை எடுக்கவில்லை என்றும் சாடுகிறார்.

நாடு முழுவதும் உள்ள நகர கூட்டுறவு வங்கிகள் மற்றும் பல மாநில கூட்டுறவு வங்கிகளின் நிதி ஆதாரத்தை பயன்படுத்துவதற்கு இந்திய ரிசர்வ் வங்கி திட்டமிட்டுள்ளது. மேலும் கூட்டுறவு வங்கிகளில் வைப்பீடு செய்பவர்களுக்கு மற்ற தேசியமயமாக்கப்பட்ட

வங்கிகளை விட கூடுதலாக வட்டி வழங்கப்பட்டுள்ள நிலையில் வட்டி சீரமைப்பு என்ற பெயரில் வைப்பீட்டாளர்களுக்கு வட்டி விகிதம் குறைக்கப்படும் அபாயமும் உள்ளது. வைப்பீட்டாளர்களின் வைப்பீடு மீது வருமான வரி கணக்கு மற்றும் வருமானவரி செலுத்த வேண்டிய நிர்பந்தத்தை ஏற்படுத்தவும் வாய்ப்பு உள்ளது. கண்காணிப்பு என்ற பெயரில் ஏற்கனவே உள்ள கூட்டுறவுத் துறை அதிகாரிகளுக்கும் மேலாக ரிசர்வ் வங்கி அதிகாரிகளை மேலாண்மை நிர்வாகிகளை பணியமர்த்தலாம்.

இதனால் தேர்ந்தெடுக்கப்பட்ட நிர்வாகக் குழுவின் அதிகாரம் முற்றிலுமாக பறிக்கப்படும். ஆளும் கட்சி அரசியல் பின்னணியில் இவ்வங்கிகளில் உள்ள வைப்புத் தொகைகள் முத்ரா கடன், பண்ணை சாரா கடன் என மடைமாற்றம் செய்ய வாய்ப்புள்ளது. இது ஏதோ நகர கூட்டுறவு வங்கிகளுக்கு மட்டுமல்ல எதிர்காலத்தில் அனைத்து விவசாயம், பால், கைத்தறி உள்ளிட்ட அனைத்து கூட்டுறவு நிறுவனங்களின் மீதும் தனது ஆதிக்கத்தை செலுத்துவதற்கு இந்திய அரசு முன்னெடுத்திருப்பதற்கான முன்னோட்டமாகவே உள்ளது. ●

அஞ்சலி



## தோழர். எஸ். சந்திரன்

தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கத்தின் கோவை மாவட்ட முன்னாள் தலைவர்

மறைவு: 26.12.2021

# மாவட்ட ஆட்சியருடன் திருச்சி மாவட்ட நிர்வாகிகள் சந்திப்பு



03.02.2022 அன்று தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கத்தின் திருச்சிராப்பள்ளி மாவட்ட மையத்தின் சார்பில் 30.01.2022 அன்று நடைபெற்ற மாவட்ட செயற்குழு கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்களான கரோனா காலத்தில் பணியாற்றிய முன்களப்பணியாளர்கள் அனைவருக்கும் ஊக்கத்தொகை வழங்க வேண்டும், திருச்சி சத்திரம் பேருந்து நிலையம் மற்றும் மத்திய பேருந்து நிலையத்திலிருந்து மாவட்ட ஆட்சியர் அலுவலகம் வந்து செல்ல நகரப் பேருந்துகள் மற்றும் மகளிருக்கு சிறப்பு பேருந்துகள் இயக்க கோரியும், சத்திரம் பேருந்து நிலையம் அருகில் ஏற்கனவே இயங்கி வந்த இஎஸ்ஐ மருந்தகத்தை(தற்போது பெரியமிளகுபாறையில் உள்ள) அதே பகுதியில் மீண்டும் செயல்படுத்த வேண்டும், ஒவ்வொரு அரசு அலுவலகங்களிலும் அரசு வழிகாட்டுதல்படி "விசாகா கமிட்டி" அமைக்கப்படவேண்டும், திருச்சி மாநகராட்சி பகுதிகளில் பணியாற்றும் எம்ஆர்பி செவிலியர்களுக்கு ஈட்டுறுதி சாந்தா தொகை பிடித்தம் செய்ய வேண்டும், ஊதிய சீட்டு (Pay Slip) வழங்க வேண்டும் உள்ளிட்ட பல்வேறு கோரிக்கைகளை. விரிவாக எடுத்துரைத்து, கோரிக்கையை நிறைவேற்றி வலியுறுத்தி திருச்சிராப்பள்ளி மாவட்ட ஆட்சியர் அவர்களை நேரில் சந்தித்து மாநில துணைத் தலைவர் தோழர் எ.பெரியசாமி மாவட்ட தலைவர் கா. பால் பாண்டி மற்றும் மாவட்ட செயலாளர் தோழர் பொ. பழனிசாமி வழங்கினார்கள். மாவட்ட ஆட்சியர் அவர்கள் உரிய நடவடிக்கை மேற்கொள்வதாக தெரிவித்துள்ளார்.

கட்டுரை

# உயர்நீதிமன்ற தலைமை நீதியரசரின் வார்த்தைகள்

- P.கருணாகரன்

நமது சென்னை உயர்நீதிமன்ற நீதியரசர் சஞ்சய் பானர்ஜி அவர்கள் கடந்த வாரம் மேகாலயா நீதிமன்றத்திற்கு மாறுதல் செய்யப்பட்டார். அப்பொழுது அவருடைய Letter pad.ல் சக நீதிபதிகளுக்கும், வழக்கறிஞர்களுக்கும், நீதிமன்ற ஊழியர்களுக்கும் ஒரு சில செய்திகள் வெளிவந்தது. அதில் ஊழியர்களுக்கு எழுதிய வார்த்தைகளில் முக்கியமான ஒரு வரியை மீண்டும் மீண்டும் படித்து சிந்திக்க தூண்டும் வகையில் எழுதப்பட்டிருந்தது. அது என்னவென்றால், "*My regret is that I could not completly demolish the Feudal Culture in which you serve*" என்று எழுதப்பட்டிருந்தது. Feudal Culture என்றால் நிலப்பிரபுத்துவ கலாச்சாரம் என்று அர்த்தமாகும். அதாவது நீதித்துறையில் பணியாற்றும் ஊழியர்கள் நிலப்பிரபுத்துவ கலாச்சாரத்தில் பணியாற்றுவதாக கூறியிருந்தார்.

நிலப்பிரபுத்துவ கலாச்சாரம் என்றால் என்ன? இதைப்பற்றி தெரிந்து கொள்ள வேண்டுமென்றால் மனிதகுல வரலாற்றை சற்றே தெரிந்து கொள்ள வேண்டும். ஆதிகால பொதுவுடைமை சமூகம்

பல ஆயிரக்கணக்கான ஆண்டுகளுக்கு முன்னால் மனிதன் குரங்கிலிருந்து மாறி காட்டு மிராண்டியாக வாழ்ந்து கொண்டிருந்தான். காட்டு மிராண்டியாக இருந்த மனிதன் நாகரீக வளர்ச்சியை எட்டும் பொழுது மனிதன் தனித்தனி குழுக்களாக வாழ்ந்து வந்தான். ஒவ்வொரு குழுவிற்கும் ஒரு பெண் தலைமையேற்றிருந்தாள். அதை வேட்டையாடி பிழைக்கும் சமூகம் என்றும் குறிப்பிடலாம். மனிதன் தினமும் வேட்டைக்குச் சென்று அதில் கிடைப்பதை அந்த குழுவில் தலைமையேற்றிருந்த பெண் அனைவருக்கும் சரிசமமாக பங்கிட்டு கொடுத்து சாப்பிடுவதை வழக்கமாக கொண்டிருந்தனர். அந்த சமுகத்தில் ஏற்றத்தாழ்வுகள் இல்லை. அது ஆதிகால பொதுவுடைமை சமூகம் என்று அழைக்கப்பட்டது. ஆண்டான் அடிமை சமூகம்

நாட்கள் செல்லச்செல்ல மனிதன் ஒரு கட்டத்தில் விவசாயத்தை கண்டுபிடித்தான். மனிதன் விவசாயத்தை கண்டுபிடித்த பின்பு அவனுக்கான உணவு தேவை சுலபமாக தீர்ந்தது. அவன் உற்பத்தி செய்ததில் மனிதனின் தேவைக்கு மேல் மீதம் இருந்தது. பொருட்கள் சேர ஆரம்பித்தது. அனைத்தும் பொதுவாக இருந்த ஆதிகால பொதுவுடைமை சமூகம் உடைபட்டு தனி உடமையாளன் உருவானான். அந்த காலகட்டத்தில் பெண் ஏற்றிருந்த தலைமை பாத்திரம் அவளிடமிருந்து ஆணுக்கு கைமாறியது. அதாவது ஆணாதிக்க சமூகம் உருவானது. காலப்போக்கில் அது ஆண்டான் அடிமை சமூகமாக மாறியது. அதாவது ஆள்வோர் ஒரு புறமும் மற்றவர்கள் அடிமைகளாகவும் வாழ வேண்டிய சமூகமாக சமுகம் இருந்தது. அது அடிமை சமுகம் என்று அழைக்கப்பட்டது. நிலவுடைமை சமூகம்

அதற்கு பின்னர் நாகரீகம் வளர வளர ஆண்டான் அடிமை என்ற நிலைமை மாறி நிலவுடைமையாளர்கள் ஒரு பிரிவாகவும் நிலத்தில் வேலை செய்யும் கூலி தொழிலாளர்கள் ஒரு பிரிவாகவும் இரு பிரிவுகளாக சமுகம் பிரிந்தது. நிலத்தை

கைவசம் வைத்திருக்கக் கூடிய நிலவுடைமையாளர்கள் நிலப்பிரபுக்கள் என்று அழைக்கப்பட்டனர். தமிழகத்தில் பண்ணையார்கள் என்று அழைக்கப்பட்டனர். மற்றவர்கள் அந்த பிரபுக்களிடம் வேலை செய்யும் கூலி தொழிலாளர்களாக வாழ்ந்து வந்தனர். இந்த சமூகத்தின் பெயர் தான் நிலவுடைமை சமூகம், ஆங்கிலத்தில் Feudal Culture என்று அழைக்கப்படும். நிலவுடைமை கலாச்சாரத்தின் முக்கியமான கூறுகளை தெரிந்து கொள்ள வேண்டியது அவசியமாகும். 1. நிலவுடைமை சமூகத்தில் நிலத்தில் வேலை செய்யும் கூலியாட்களுக்கு கூலியாக தானியங்கள் வழங்கப்படும். அதுவும் மிக குறைந்த அளவிலேயே இருக்கும். 2. கூலியாட்கள் குடும்பத்தோடு நிலப்பிரபுக்களிடம் வேலை செய்வார்கள். 3. கூலி உயர்வு மற்றும் எந்த உரிமையும் கேட்க கூடாது. 4. நிலப்பிரபுக்கள் தெருக்களில் வரும் பொழுது அவருக்கு எதிரில் கூலியாட்கள் வரக்கூடாது. அப்படியே வந்தாலும் காலில் செருப்பு அணியக்கூடாது. ஒதுங்கி நின்று பிரபுவுக்கு வழிவிட வேண்டும்.

5. கூலியாட்கள் நிலப்பிரபுக்கள் முன்பு தலையிலோ, தோளிலோ துண்டு அணியக்கூடாது. துண்டை இடுப்பில் கட்டிக்கொள்ள வேண்டும். 6. பெண்கள் மார்பை மறைத்து புடவை அணியக்கூடாது. கணுக்கால் மறையும் வகையில் புடவை அணியக்கூடாது. பெண்கள் தலை முடியை சடை போடக்கூடாது. 7. கூலியாட்கள் குழந்தைகளுக்கு கல்வி கற்பதற்கான வாய்ப்பே இருக்காது. 8. கூலியாட்கள் உரிமை சார்ந்து ஏதும் பேசினாலோ, கூலி உயர்வு கேட்டாலோ, வேறு ஏதேனும் தவறுகள் செய்தாலோ அவர்களுக்கு கடுமையான தண்டனை வழங்கப்படும். மாட்டுச்சாணத்தை தண்ணீரில் கரைத்து குடிக்க வைப்பார்கள். சவுக்கடி கொடுக்கப்படும். மரத்தில் கட்டி வைத்து அடிக்கும் பழக்கம் உண்டு. 9. நிலப்பிரபுக்கள் கூலி வேலை செய்யும் பெண்களிடம் பாலியல் அத்துமீறல்கள் மிக சாதாரணமாக நடக்கும்.

இது போக இன்னும் ஏராளமான சொல்லில் அடங்காத கொடுமைகளை மனிதகுலம் அனுபவித்தது. உலக வரலாற்று ஆய்வாளர்கள் கி.பி.9.ம் நூற்றாண்டிலிருந்து கி.பி.16.ம் நூற்றாண்டிற்குள் உலக அளவில் நிலப்பிரபுக்கள் சமூகம் ஒழிந்து முதலாளித்துவ சமூகம் துவங்கிவிட்டதாக கூறுகிறார்கள். ஆனால் இந்தியாவில் 1970 வரை நிலப்பிரபுத்துவ சமூகம் கொடிகட்டிப் பறந்தது. இந்தியாவில் பல்வேறு அரசியல் கட்சிகள் இருந்தாலும், கம்யூனிஸ்ட் கட்சி மட்டுமே இந்த நிலப்பிரபுத்துவ கொடுமைகளை எதிர்த்து போராடியது.


**கீழ்வெண்மணி**

நிலப்பிரபுத்துவ சமூகத்தில் கூலி வேலையாட்கள் அனுபவித்த துன்பங்களில் பிரதானமானது ஒருங்கிணைந்த தஞ்சை மாவட்டத்தில் நாகப்பட்டினத்தில் உள்ள கீழ்வெண்மணி என்ற கிராமத்தில் நடைபெற்ற கொடுமையாகும். 1967-ம் ஆண்டு அக்டோபர் மாதத்தில் கீழ்வெண்மணி கிராமத்தில் நிலப்பிரபுக்களின் பண்ணைகளில் வேலை செய்யும் கூலி தொழிலாளர்கள் அரை படி நெல் கூலி உயர்வு கேட்டு போராட்டம் நடத்தினர். அன்றைய நிலப்பிரபுக்கள் தங்களிடம் வேலை செய்யும் கூலியாட்கள் தங்களுக்கு எதிராக போராடுவதை பொறுத்துக்கொள்ளவில்லை. போராட்டம் தொடர்ச்சியாக நடைபெற்றுக்கொண்டிருந்தது. நிலவுடைமையாளர்கள் மத்தியில் கோபம் கொழுந்துவிட்டு எரிந்தது. போராட்டத்தை எப்படியாவது அடக்கியாக வேண்டுமென்பதற்காக எதையும் செய்ய நிலவுடைமையாளர்கள் தயாராக இருந்தனர். 1968ம் ஆண்டு டிசம்பர் மாதம் 25.ம் நாள் கூலித்தொழிலாளர்கள் குடியிருக்கும் பகுதிகளில் நிலப்பிரபுக்கள் கோபாலகிருஷ்ண நாயுடு என்ற பண்ணையாரின் தலைமையில் அடியாட்களுடன் நாட்டு துப்பாக்கியோடு தாக்குதல் நடத்தினர். உயிரைக் காப்பாற்றிக்கொள்ள 45 கூலி தொழிலாளர்கள் ராமையா என்பவருடைய குடிசைக்குள் சென்று ஒளிந்து கொண்டனர். இதை அறிந்து

கொண்ட பண்ணையார் கோபாலகிருஷ்ண நாயுடு அந்த குடிசை வீட்டின் வெளிப்புறம் தாழிடச் சொல்லி அடியாட்களுக்கு உத்தரவிட்டு குடிசையின் வெளியே தாழிட்டு தீ வைத்தனர். குடிசைக்குள் இருந்த கூலித்தொழிலாளர்கள் வயதானவர்கள், பெண்கள், குழந்தைகள் என 45 பேரும் எரிந்து சாம்பலானார்கள். அவர்கள் இறந்து சாம்பலான அந்த இடம் இன்னும் நினைவிடமாக பாதுகாக்கப்பட்டு வருகிறது.

நிலப்பிரபுத்துவ கொடுமைக்கு கீழ்வெண்மணி சம்பவம் ஒரு உதாரணமாகும். இன்றைய 21.ம் நூற்றாண்டில் கூட ஒரு சில மனிதர்களை பண்ணையார் என்றும் மிராசுதாரர் என்றும் அடைமொழியோடு அழைக்கக் கூடிய வழக்கம் நம் சமுகத்தில் இருந்து கொண்டு தான் இருக்கிறது. இறுதியாக மாண்புமிகு நீதியரசர் அவர்கள் நீதித்துறை ஊழியர்கள் இன்னும் நிலப்பிரபுத்துவ கலாச்சாரத்தில் பணி செய்துகொண்டு இருப்பதாக கூறியிருக்கிறார். நீதித்துறையில் பணியாற்றும் ஊழியர்கள் நாடு சுதந்திரம் அடைந்து 75 ஆண்டுகளுக்கு மேல் ஆனால்கூட உரிமைகள் கோர இயலாத மனிதர்களாக பல்வேறு இன்னல்களுடன் பணியாற்றிக் கொண்டிருக்கிறார்கள். அவர்கள் அன்றாடம் சந்திக்கும் இன்னல்கள் சொல்லி மாளாது. நீதித்துறையிலுள்ள நிலப்பிரபுத்துவ கலாச்சாரத்தை மாற்ற வேண்டுமென்பதை மாண்புமிகு நீதியரசர் அரசர் அவர்களுடைய வார்த்தைகள் பிரதிபலிக்கின்றன. எனவே தமிழ்நாடு நீதித்துறை ஊழியர் சங்கம் வெறும் லெட்டர் பேட் சங்கமாக இல்லாமல் ஊழியர்களை திரட்டி பலமான போராட்டங்களை / முன்னெடுப்பது மூலமாகத்தான் நீதித்துறை ஊழியர்கள் கௌரவத்தோடும், நிம்மதியோடும், உரிமை சார்ந்த ஊழியர்களாக பணியாற்ற இயலும். போராட்ட குணம் கொண்ட சங்கத்தை கட்டமைப்பது ஒன்றே நமது நோக்கமாக வைத்து செயல்பட வேண்டும்.

●



# ஐயா கருப்பையா

*24.1.2022 அன்று, நமது சங்க கட்டடத்தில் காவலனாய் பாதுகாவலராய் நம் எல்லோர் குடும்பத்திலும் ஒருவராய் இச்சங்க கட்டடத்திற்கு ஒரு எஜமானராய் கடந்த 25 ஆண்டுகளாக பணியாற்றிவந்த ஐயா. கருப்பையா அவர்கள் இயற்கை எய்தினார்.*

*அன்னாரின் நினைவைப் போற்றும் விதமாக 5.2.2022 அன்று தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கம் மதுரை மாவட்ட மையம் சார்பில் நினைவேந்தல் மற்றும் படத்திறப்பு நிகழ்ச்சி ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. மாவட்டத்தலைவர் ஜெ.மூர்த்தி மூர்த்தி தலைமை தாங்கினார் நினைவேந்தல் கூட்டத்தில் தமிழ்நாடு அரசு சங்க மாநிலத்தலைவர் மு.அன்பரசு பொதுச்செயலாளர் ஆ.செல்வம், மாநில துணைபொதுச்செயலாளர்கள் இரா. மங்களபாண்டியன், த.வாசுகி, மாநில துணைத்தலைவர் மொ.ஞானத்தம்பி மாவட்டச்செயலாளர் க.நீதிராஜா,இந்திய தொழிற்சங்க மையத்தின் மதுரை மாவட்ட செயலாளர் ஆர்.தெய்வராஜ், தமிழ்நாடு அரசுஅனைத்து துறை ஓய்வு சங்க மாநில பொருளாளர் ஜெயச்சந்திரன் தமிழ்நாடு அரசு ஊழியர் சங்க மதுரை மாவட்ட முன்னாள் செயலாளர் சு.கிருஷ்ணன் த.மு.எ.க.ச மதுரை மாவட்ட தலைவர் அ.சாந்தாராம் எல்ஐசி உள்ளிட்ட தொழிற்சங்க நிர்வாகிகள், ஜாக்டோ-ஜியோ ஒருங்கிணைப்பாளர் மு.சந்திரன் மற்றும் தமிழ்நாடு அரசு ஊழியர் சங்க மாவட்ட வட்ட கிளை நிர்வாகிகள் கலந்து கொண்டு நினைவுகளை பகிர்ந்து கொண்டனர். குடும்பத்தினர் 12 பேர் உள்ளிட்ட 64 பேர் கலந்து கொண்டனர்.*

# 2022 மார்ச் – 28,29
# முதலாளித்துவ அரசியலுக்கு முடிவுகட்ட அகில இந்திய வேலைநிறுத்தத்தில்
# அணிவகுப்போம்!

விவசாயிகள், தொழிலாளர்கள், அரசு ஊழியர்கள் என உழைக்கும் வர்க்கமாக உள்ள எந்த ஒரு அமைப்பும் தன்னை நிலை நிறுத்திக்கொள்ள அவ்வப்போது போராட்டங்களையே முன்னெடுக்க வேண்டியுள்ளது. முன்னெடுக்கும் போராட்டங்கள் எதுவும் முதல் நாளிலேயே முடிந்துவிடுவதில்லை. இன்றைய அரசியல் சூழ்நிலையில் எந்தப் போராட்டமானாலும் கடுமையானதாகவும், நீடித்ததாகவும், வலி நிறைந்ததாகவும், பழிவாங்கலைத் தாண்டி முன்னேறுவதாகவுமே இருக்கின்றன. உண்மைக்கும் உரிமைக்கும் போராடும் சங்கங்கள் உறுதிப்பாட்டோடு கடமையாற்றிட வேண்டிய கடப்பாடுகள் நிறைந்த காலமாக உள்ளது இது. அதனால் இன்றைய காலகட்டத்தில் எந்தப் போராட்டமும் எளிமையானதில்லை என்பது எதார்த்தமாகியிருக்கிறது.

கலாச்சார உரிமைக்கான ஜல்லிக்கட்டு போராட்டமாக இருந்தாலும் சரி, விளை நிலங்களில் விளையும் தானியங்களை கார்ப்பரேட் களவாளிகளிடம் விற்க வைத்து விவசாயிகளை அடிமைக்கூலிகளாக மாற்றிடப் பார்த்த வேளாண் சட்டங்களை எதிர்த்த போராட்டமாக இருந்தாலும் சரி அவை எதுவும் உடனடியாக முடிவுக்கு வந்துவிடவில்லை . தில்லி போராட்டமும், ஜல்லிக்கட்டு போராட்டமும் முடிவுக்கு வந்ததில் முக்கிய காரணம் ஓட்டு அரசியலும் பதவி அரசியலும் இருந்தன. ஜல்லிக்கட்டு தடையை நீக்காவிட்டால் தமிழ்மக்கள் தண்டித்துவிடுவார்கள் என்பதாலும் வேளாண் சட்டங்களை விலக்கிக் கொள்ளாவிட்டால் ஐந்து மாநிலங்களில் பாஜக தோல்வியை சந்திக்க நேரிடும் என்ற பயத்தினாலேயே அவை விலக்கிக் கொள்ளப்பட்டனவே அன்றி அந்த சட்டங்கள் விவசாயிகள் பொது மக்கள் நலனுக்கு எதிரானவை என்று ஆட்சியாளர்கள் உணர்ந்து கொண்டு விலக்கிக்கொள்ளவில்லை என்பதை நாம் விளங்கிக் கொள்வது அவசியமாகும்.

இதுபோன்ற மக்கள் விரோத, தொழிலாளர் விரோத, நாசகாரமான தேசவிரோத கொள்கைகளுக்கு எதிராக அரசாங்கங்கள் செயல்படும்போது அவற்றை எதிர்த்து அனைத்து உழைப்பாளர், தொழிலாளர், மக்களும் ஒன்றிணைந்து போராட வேண்டிய அவசியம் ஏற்பட்டுவிடுகிறது. தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கம் எண்ணற்ற தனிப் போராட்டங்களை நடத்தியிருக்கிறது, ஜாக்டோ ஜியோ என்ற கூட்டமைப்பின் மூலமாக அரசு ஊழியர்கள் ஆசிரியர்கள் ஒன்று சேர்ந்து அதன்மூலமாகவும் பல போராட்டங்கள் நடத்தி அரசை பணிய வைத்துள்ளது. தனிக் கொட்டகை போட்டு தன்னை தனிமைப்படுத்திக்கொள்ளாமல் உழைப்பாளர் வர்க்கம் என்ற பொது பிரவாகத்தில் ஒன்றிக் கலந்து மத்திய மாநில அரசுகளின் கொள்கைகளையும் அதன் பின்னால் இருக்கும் முதலாளித்துவ அரசியலையும் எதிர்த்து போராடுகிற அமைப்பாக இருந்து வருகிறது தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கம். தொழிற்சங்கங்கள் நடத்தும் அனைத்து அகில இந்திய வேலை நிறுத்தங்களிலும் கலந்து கொண்டு தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கம் தனது பங்களிப்பை தொய்வில்லாமல் செய்து வருகிறது.

மத்திய அரசு பணமயமாக்கல் திட்டத்தின் மூலம் அரசின் சொத்துக்களை குத்தகைக்கு விடுவது என்ற பெயரால் இந்த நாட்டை

முதலாளிகளுக்கு தாரை வார்க்கத் துடிக்கிறது. விமானம், ரயில்வே, சாலைகள், துறைமுகம், பாதுகாப்பு, மின்சாரம், சுரங்கங்கள் போன்ற தயார்நிலையில் இருக்கும் அனைத்து சொத்துக்களையம் முதலாளிகளின் வேட்டைக் காடாக்க துணிந்திருக்கிறது. இன்று இந்திய மக்களின் ஒற்றுமையை சிதைக்கும் வண்ணம் வகுப்புவாதத்தையும், சாதி அரசியலையும் பயன்படுத்துகிற தேச விரோத சக்திகளின் கூடாரமாக மத்திய அரசு மாறியிருக்கிறது. தொழிலாளர் சட்டங்களைத் திருத்துவது, விவசாய சட்டங்களை திணிப்பது, காஷ்மீர் மாநிலத்தை துண்டு துண்டாக்கி யூனியன் பிரதேசம் ஆக்குவது, அடக்கு முறைச் சட்டங்கள் மூலம் மாற்றுக் கருத்துக்களை ஒடுக்குவது, பல நூற்றுக்கணக்கான அறிஞர்கள், சிந்தனையாளர்கள், பத்திரிகையாளர்கள், சமூக செயல்பாட்டாளர்களை விசாரணை ஏதுமின்றி சிறைகளில் அடைத்து வைப்பது. நாடாளுமன்றத்தை கேலிக் கூத்தாக்குவது, நீதிமன்றங்கள், சி.பி.ஐ., தேர்தல் ஆணையம், தணிக்கைப் பிரிவு, ரிசர்வ் வங்கி போன்ற சுயேச்சையான அமைப்புகள் அனைத்தையும் கைப்பாவையாக்குவது என்ற பாசிசத் தன்மை கொண்ட நாசகார நடவடிக்கைகளை மத்திய அரசு முன் எப்போதும் இல்லாத அளவிற்கு தீவிரப்படுத்தி வருகிறது.

இத்தகைய மக்கள் விரோத, நாசகரமான தேச விரோத கொள்கைகளுக்கு எதிராக வரும் 2022 மார்ச் 28, 29 தேதிகளில் அகில இந்திய வேலை நிறுத்தம் மேற்கொள்ளுமாறு மத்திய தொழிற்சங்கங்கள் மற்றும் துறைவாரியான அகில இந்திய சம்மேளனங்கள் மற்றும் சங்கங்களின் கூட்டுமேடை அறைகூவல் விடுத்துள்ளது.

மத்திய தொழிற் சங்கங்கள், துறைவாரி சம்மேளனங்கள் மற்றும் தொழிற்சங்கங்களின் மாநிலக் கிளைகள் ஆகியவை மாநில அளவில் சிறப்பு மாநாடுகள், மனித சங்கிலி இயக்கங்கள், மெழுகுவர்த்திப் பேரணிகள், கையெழுத்து இயக்கங்கள் நடத்தி ஒன்றிய பாரதிய ஜனதா அரசின் தொழிலாளர் விரோத, விவசாயிகள் விரோத, மக்கள் விரோத, கார்ப்பரேட் ஆதரவு நடவடிக்கைகளை எதிர்த்து விழிப்புணர்வு பிரச்சாரங்கள் மேற்கொள்ள முடிவெடுத்துள்ளன.

கூட்டு மேடையின் அறைகூவலுக்கு இணங்க பல்வேறு துறைகளில் பல்வேறு போராட்டங்களும், ஆர்ப்பாட்டங்களும், கிளர்ச்சிகளும் நடந்து கொண்டிருக்கின்றன. 2021 டிசம்பர் 16, 17 தேதிகளில் வங்கிகள் நடத்திய இரண்டு நாள் வேலை நிறுத்தத்திற்கும் அதேபோன்று 2022 பிப்ரவரி 1ஆம் தேதி மின் ஊழியர் சங்கங்களின் கூட்டமைப்பு, தனியார் மயத்திற்கு எதிராக நடத்திடவுள்ள வேலை நிறுத்தத்திற்கும் அகில இந்திய கூட்டுமேடை ஆதரவு அளித்துள்ளது.

அகில இந்திய தொழிற்சங்கங்கள் அறிவித்துள்ள இந்த வேலை நிறுத்தத்திற்கு இந்தியா முழுவதிலும் ஆதரவு பெருகி வருகிறது. இந்த இரண்டு நாள் அகில இந்திய வேலை நிறுத்தம் மக்களின் உரிமைகளையும், வாழ்வையும். வாழ்வாதாரங்களையும் பாதுகாப்பதற்கான போராட்டம் மட்டுமல்ல, நாட்டின் ஒட்டுமொத்த பொருளாதாரம், ஜனநாயக அமைப்புமுறை ஆகியவற்றை பாதுகாப்பதற்கான போராட்டமும் மற்றும் ஆட்சியில் உள்ள ஏதேச்சதிகார சக்திகள், உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு தனியார் கார்ப்பரேட்டுகளின் உதவியுடன் ஒட்டுமொத்த சமூகத்தையே பேரழிவுக்கு ஏற்படுத்தக்கூடிய விதத்தில் மேற்கொண்டுள்ள நடவடிக்கைளுக்கு எதிரான போராட்டமும் ஆகும்.

விவசாயிகள் போராட்டம், மூர்க்கத்தனமான மோடி அரசாங்கத்திடம் இருந்து வேளாண் சட்டங்களை ரத்து செய்திடும் வரலாற்று வெற்றியை படைத்திருக்கிறது. இப்போது தொழிலாளர்கள், விவசாயிகள், அரசு ஊழியர்கள், ஆசிரியர்கள் தங்களின் ஒன்றுபட்ட நடவடிக்கைகள் மூலமாக மக்களின் வாழ்வு மற்றும் வாழ்வாதாரங்களைப் பறித்திடும் மத்திய அரசின் கொள்கைகளை முறியடித்திட ஒன்றுகூடி போராட முன்வந்துள்ளனர்.

வேலை செய்வதற்கான உரிமை, வாழ்க்கைக்கு ஊதியம் அளிப்பதற்கான உரிமை. தரமான சுகாதாரப் பாதுகாப்பு, கல்வியை இலவசமாக அளித்தல் மற்றும் நியாயமான அரசமைப்பு சட்ட உரிமைகள் ஆகியவற்றைப் பாதுகாத்திட அனைத்து அரசியல் கட்சிகளையும் நாம் கோரவேண்டும். வரவிருக்கும் 2024 தேர்தலின் போது தங்கள் தேர்தல் அறிக்கையில் அரசியல் கட்சிகள் அறிவித்திட அழுத்தம் கொடுக்க வேண்டும். தாங்கள் ஆட்சிக்கு வந்தால் தொழிலாளர்கள் விவசாயிகள் அரசு ஊழியர்கள் ஆசிரியர்கள் என அனைத்துத் தரப்பு மக்களின்

உரிமைகளையும் காப்போம் என்ற உறுதிமொழியை அவர்களிடமிருந்து பெற்றிட வேண்டும். இந்திய அளவில் மார்ச் 28, 29 தேதிகளில் நடைபெறும் மாபெரும் இரண்டு நாள் வேலை நிறுத்தத்தில் அரசு ஊழியர்களாகிய நாமும் கலந்து கொண்டு அரசு ஊழியர்கள் கோரிக்கைளும், அகில இந்திய கோரிக்கைளும் வெற்றிபெற முன் நிற்க வேண்டும்.

அரசு ஊழியர் இயக்கம் அகில இந்திய வேலை நிறுத்தத்தில் கலந்து கொள்வது என்ற அறைகூவல் தீர்மானத்தை பொன்னெழுத்துகளால் எழுதப்பட்டுக் கொண்டிருக்கும் 14ஆம் மாநில மாநாட்டில் அறைகூவல் தீர்மானமாக ஒருமனதாக நிறைவேற்றியுள்ளோம்

இரண்டு நாள் அகில இந்திய வேலை நிறுத்தத்தில் கலந்து கொள்ளும் தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கம் முன்னெடுக்கும் கோரிக்கைகளாவன

1. பழைய ஓய்வூதியத் திட்டத்தை கொண்டு வருக. புதிய ஓய்வூதியத் திட்டத்தை திரும்ப பெறுக.
2. ஊழியர் ஓய்வூதியத் திட்டத்தின் கீழான குறைந்தபட்ச ஓய்வூதியத்தில் கணிசமான குறைந்தபட்ச ஓய்வூதியம் அளித்திடுக.
3. அகவிலைப்படி, சரண்விடுப்பு, வருங்கால வைப்புநிதி வட்டிக் குறைப்பு உள்ளிட்ட கொரோனா தொற்றுக் காலத்தில் பறிக்கப்பட்ட சலுகைகளை உடனடியாக வழங்கிடுக.
4. மத்திய மாநில அரசுத்துறைகளில் உள்ள காலிப்பணியிடங்களை நிரப்பிடுக.
5. அரசுத்துறைகளில் ஒப்பந்தம், தினக்கூலி, அவுட்சோர்சிங் முறைகளை கைவிட்டு அந்தப் பணியாளர்களுக்கும் சிறப்பு காலமுறை ஊதியம் பெறுபவர்களுக்கும் வரையறுக்கப்பட்ட ஊதியம் வழங்கிடுக.
6. இராணுவம், இரயில்வே, ஆயுள் காப்பீடு, வங்கி, பிஎஸ்என்எல் உள்ளிட்ட பொதுத்துறை நிறுவனங்களை தனியார்மயப்படுத்துவதை கைவிடுக.
7. மத்திய அரசு தன் ஊழியர்களுக்கு வழங்கியது போல தமிழக அரசு ஊழியர்கள் ஆசிரியர்களுக்கு 21 மாத ஊதியமாற்ற நிலுவைத் தொகை வழங்கிடுக.
8. அனைத்து தொழிலாளர் விரோத, விவசாயிகள் விரோத சட்டங்களையும் நடவடிக்கைகளையும் திரும்ப பெறுக. அதேபோன்று அத்தியாவசிய பாதுகாப்புப் பணிகள் சட்டத்தையும் ரத்து செய்க.
9. புதிய கல்விக் கொள்கையை கைவிடுக.
10. தமிழகத்தில் அரசு ஊழியர்கள் ஓய்வு பெறும் வயது 60 ஆக உயர்த்தியதை 58 ஆக குறைத்து ஓய்வு பெறுபவர்கள் முழு பணப்பயன்களுடன் ஓய்வு பெறுவதை உறுதி செய்க.
11. சம வேலைக்கு சம ஊதியம் வழங்கிடுக.
12. தேசிய பணமாக்கு திட்டத்தை ரத்து செய்திடுக.
13. வேளாண் சட்டங்களை ரத்து செய்த போதிலும் சம்யுக்த கிசான் மோர்ச்சா முன் வைத்துள்ள இதர ஆறு கோரிக்கைகளையும் நிறைவேற்றுக.
14. வருமான வரி செலுத்தாத அனைத்துக் குடும்பத்தினருக்கும் மாதந்தோறும் ரூ.7500/-ஐ உணவு மற்றும் வருமான ஈடாக வழங்கிடுக.
15. பெட்ரோலியப் பொருட்களின் மீதான கலால் வரியை கணிசமாகக் குறைத்திடுக.
16. விலைவாசி உயர்வைக் கட்டுப்படுத்திட உறுப்படியான நடவடிக்கைகள் மேற்கொள்க.
17. முறைசாரா தொழிலாளர்கள் அனைவருக்கும் சமூகப் பாதுகாப்புத் திட்டங்களை அறிவித்திடுக.
18. அங்கன்வாடி 'ஆஷா' ஊழியர்கள், சத்துணவு ஊழியர்கள், இதர காலமுறை ஊதியம் பெறுபவர்களுக்கு குறைந்தபட்ச ஊதியத்துடன் வரையறுக்கப்பட்ட ஊதியம் வழங்கிடுக.
19. கொரோனா வைரஸ் தொற்றின் போது பணியாற்றிய முன்களப் பணியாளர்கள், தொழிலாளர்கள் அனைவருக்கும் முறையான பாதுகாப்பு மற்றும் இன்சூரன்ஸ் வசதிகளை அளித்திடுக.
20. மகாத்மா காந்தி தேசிய கிராமப்புற வேலை வாய்ப்பு உத்தரவாதச் சட்டத்தின் கீழ் ஒதுக்கீட்டை அதிகப்படுத்தி அதனை நகர்ப்புறங்களுக்கும் விரிவாக்கிடுக. ●

## தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கம்

# 14ஆம் மாநில மாநாட்டில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள்

**1. கால்நடை பராமரிப்பு உதவியாளர் பணியிடங்களை தொழில்நுட்ப பதவிகளாக வகைப்படுத்தி முன்களப் பணியாளர்களாக அங்கீகரித்திட கோருதல்:**

கால்நடை பராமரிப்புத்துறையின் கால்நடை பராமரிப்பு உதவியாளர்கள் பதவிகளை தொழில்நுட்ப பதவிகளாக அங்கீகரித்து அரசு ஆணை 338/நிதி/நாள். 26.08.2018-ன்படி பரிந்துரைக்கப்பட்ட மேம்படுத்தப்பட்ட ஊதியம் அனுமதிக்க வேண்டும்.

கால்நடை பராமரிப்பு உதவியாளர்கள் பதவி உயர்வின்றி 30 ஆண்டுகளுக்கும் மேலாக ஒரே பதவியில் பணிபுரிந்து ஓய்வு பெறும் சூழ்நிலையைக் கருத்தில் கொண்டு ஒவ்வொரு 5 ஆண்டு பணிக்கு நிலை-1 என்ற தரம் உயர்த்தும் ஆணையை பிறப்பிக்க வேண்டும்.

கால்நடை பராமரிப்பு உதவியாளர்கள் சிலர் 10-ஆம் வகுப்பும், அதற்கு மேற்பட்ட கல்வித்தகுதி

பராமரிப்பு உதவியாளர் பதவியில் 7 ஆண்டுகள் பணி முடிப்பிற்குப் பின் இளநிலை உதவியாளராக பதவி உயர்வு பெற தலைமை அலுவலக கடிதம் ந.க.எண்.470/12/இ இ 01.02.2016, 07.10.2016-ன்படி 6 மாத காலம் பயிற்சி வழங்கப்பட்டுள்ளது. ஆயினும் இதுவரையிலும் அவர்களுக்கு பதவி உயர்வு நியமனம் வழங்கப்படவில்லை. தற்சமயம் 11 ஆண்டு பணியை நிறைவு செய்துள்ள நிலையில் பயிற்சி பெற்றோருக்கு இளநிலை உதவியாளர் பணிநியமனம் வழங்க வேண்டும்.

கால்நடை பராமரிப்பு உதவியாளர்களில் சிலர் +2 கல்வி தகுதி பெற்று 5 ஆண்டுகள் பணிபுரிந்து கால்நடை ஆய்வாளர் நிலை-II பதவிக்கு தேர்வு செய்யப்பட்ட நடைமுறையில் கடந்த 2017-ல் 165 பேர் பயன்பெற்றனர். வருடா வருடம் இந்த நடைமுறை தொடர்ந்திருந்தால் தகுதி பெற்றுள்ள அனைவரும் கால்நடை ஆய்வாளர் பயிற்சி பெற்று பதவி உயர்வு கிடைத்திருக்கும். கால்நடை ஆய்வாளர் பதவிக்கு அரசு ஆணை 181 கால்நடை பராமரிப்புத்துறை 07.11.2011-ன்படி தேர்வு செய்ய பரிசீலிக்கப்பட்ட போது சுமார் 30 நாள் இடைவெளியில் பலர் வாய்ப்பை இழந்துவிட்டனர். தற்போது சுமார் 583 கால்நடை ஆய்வாளர் நிலை-II பதவி காலியாக உள்ளதை கணக்கில் கொண்டு தகுதியுள்ள அனைவரையும் பயிற்சிக்கு தேர்வு செய்திட வேண்டும்.

கால்நடைத்துறை, தொழில் நுட்பத் துறையாக அரசால் அனுமதிக்கப்பட்டுள்ள நிலையில் தொழில்நுட்ப அலுவலர்களுடன் இணைந்து பணியாற்றும் கால்நடை பராமரிப்பு உதவியாளர் பணியிடங்களை தொழில்நுட்ப பதவிகளாக வகைப்படுத்தி முன்களப் பணியாளர்களாக அங்கீகரித்திடவும் வேண்டும் என தமிழக அரசை தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கம் கனிவுடன் கொள்கிறது,

**2. கூட்டுறவுதுறையில் செயல்படுத்தப்படும் திட்டங்களுக்கு ஏற்ப புதிய பணியிடங்களை உருவாக்கிட கோருதல்:**

கூட்டுறவுத் துறையில் 15 ஆண்டுகளுக்கு மேலாக பதவி உயர்வு இன்றி உள்ள சுருக்கெழுத்தர் மற்றும் தட்டச்சர்களுக்கு இளநிலை ஆய்வாளர் பதவி உயர்வு வழங்கிட வேண்டும்.

இளநிலை ஆய்வாளர்களுக்கு பதவி உயர்வு பணியினை முதுநிலை ஆய்வாளர் பணியினை வழங்கிய பிறகு மீதமுள்ள பணியிடத்திற்கு அரசு தேர்வாணையம் மூலம் நேரடி நியமனம் வழங்கிட வேண்டும்.

தகுதியுடைய பதிவறை எழுத்தர்களுக்கு இளநிலை உதவியாளர் பதவி உயர்வு வழங்கிட வேண்டும். மாவட்ட ஆட்சியர் அலுவலகங்களில் கூட்டுறவுதுறை சார்பாக நேர்முக உதவியாளர் பணியிடம் உருவாக்கிட வேண்டும். கூட்டுறவுதுறையில் செயல்படுத்தப்படும் திட்டங்களுக்கு ஏற்ப புதிய பணியிடங்களை உருவாக்கிட வேண்டும் என தமிழக அரசை தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கம் கனிவுடன் கேட்டுக்கொள்கிறது.

**3. IFHRMS திட்டத்தை ஆய்வு செய்து ஊழியர்களின் பணிச்சுமையை குறைத்திட கோருதல்:**

தமிழ்நாடு அரசு ஒருங்கிணைந்த அரசு பள்ளிகளில் பல ஆண்டுகளாக சமக்ரா சிக்ஸா திட்டத்தில் தற்காலிக ஊழியர்களாக பணியாற்றி வருபவர்களை பணிநிரந்தரம் செய்திடவேண்டும். பள்ளிக்கல்வித்துறையில் பத்து ஆண்டுகளுக்கு முற்பட்ட புள்ளிவிவரங்களை தினந்தோறும் மாறுபட்ட பல்வேறு படிவங்களில் கேட்டு பணியாளர்களை மன உளைச்சளுக்கு ஆளாக்கி நடப்பு வேலைகளை செய்ய இயலாவண்ணம் ஆளாகி வருகின்றனர். இது போன்ற செயல்களை தவிர்த்து ஊழியர்களை அன்றாட பணிகளை சரியாக செய்துவர ஆவண செய்யவேண்டும். IFHRMS திட்டம் முழுக்க முழுக்க WIBRO நிறுவன ஊழியர்களையே நம்பியிருக்க வேண்டியுள்ளது. தற்போது முதல்வராக உள்ள மாண்புமிகு ஸ்டாலின் அவர்கள் எதிர்கட்சி தலைவராக இருந்தபோது IFHRMS திட்டம் ஆய்வு செய்யப்படும் என்று தெரிவித்திருந்தார். தற்போதுவரை எந்த நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை எனவே IFHRMS திட்டத்தை ஆய்வு செய்து ஊழியர்களின் பணிச்சுமையை குறைத்து அவர்கள் மன அழுத்தமின்றி பட்டியல்கள் தயாரிக்க ஆவண செய்ய வேண்டும் என தமிழக அரசை தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கம் கனிவுடன் கேட்டுக்கொள்கிறது.

**4. உணவு பாதுகாப்பு அலுவலர்களுக்கு பணிப்பாதுகாப்பு மற்றும் அலுவலக கட்டமைப்பு வசதிகள் வழங்கிட கோருதல்:**

05.08.2011 முதல் இந்தியா முழுமைக்கும் அமல் படுத்தப்பட்ட உணவு பாதுகாப்பு மற்றும் தர நிர்ணயச் சட்டம் 2006 மற்றும் விதிகள் 2011 ன்படி தமிழ் நாட்டில் செயல்பட்டு வரும் உணவு பாதுகாப்பு மற்றும் மருந்து நிர்வாகத் துறையில் உணவு பாதுகாப்பு பிரிவில் மேற்படி சட்ட விதிகளில் உள்ளபடி வட்டாரம், நகராட்சி மற்றும் மாநகராட்சியில் உணவு பாதுகாப்பு அலுவலர்களாக சுகாதார ஆய்வாளர்கள் மற்றும் துப்புரவு ஆய்வாளர்கள் நியமனம் செய்யப்பட்டனர்.

உணவு பாதுகாப்பு அலுவலர்களுக்கான தற்காலிக பணிவிதியை வெளியிட்ட தமிழ்நாடு அரசு, சட்டவிதிகளின்படி நியமனம் செய்யப்பட்ட மேற்படி உணவு பாதுகாப்பு அலுவலர்களுக்கு பணிப்பாதுகாப்பு (Saving Clause) ஏதோ காரணங்களால் வழங்கப்படவில்லை . இது குறித்து தமிழ் மாநில உணவு பாதுகாப்பு அலுவலர்கள் சங்கம் சார்பில் அரசுடன் பல் வேறுமுறை பேச்சுவார்த்தை நடத்தி எழுத்து பூர்வமாக அரசு ஏற்றுக் கொண்டும் மேற்படி தற்காலிக பணிவிதிகளில் பணிப்பாதுகாப்பு வழங்கப்படவில்லை.

பத்து ஆண்டுகளுக்கும் மேலாக சட்ட விதிகளின்படியும், இயற்கை நீதி அடிப்படையிலும் உணவு பாதுகாப்பு அலுவலர்கள் பணிவிதியில் தற்போது பணிபுரிந்துவரும் உணவு பாதுகாப்பு அலுவலர்கள் அனைவருக்கும் பணி பாதுகாப்பு (Saving Clause) வழங்கிட வேண்டும்.

தமிழ்நாடு அரசு ஊழியர் சங்க நாகப்பட்டினம் மாவட்ட செயலாளரும், அகில இந்திய மாநில அரசு ஊழியர் சம்மேளனத்தின் தேசிய செயற்குழு உறுப்பினருமான தோழர் அ.தி. அன்பழகன் நாகப்பட்டினம் நகராட்சி உணவு பாதுகாப்பு அலுவலராக பணிபுரிந்து வந்தார். தமிழ் மாநில உணவு பாதுகாப்பு அலுவலர்கள் சங்க மாநில பொதுச் செயலாளராக, அவர்கள் சங்க கோரிக்கைகளை வலியுறுத்தி தொடர்ந்து செயல்பட்டதாலும், அன்றைய அதிகார வர்க்கம் உணவு பாதுகாப்பு அலுவலர்களிடம் நியாயமற்ற வகையில் எதிர்பார்த்ததை

நிறைவேற்றாததாலும் 1702.2020 அன்று தோழர் அ.தி. அன்பழகன் உணவு பாதுகாப்பு துறையிலுருந்து வெளியேற்றப்பட்டார். தொடர்ந்து சென்னை உயர்நீதிமன்றத்தில் வழக்கு நடைபெற்று வந்த நிலையில் புதிதாக பொறுப்பேற்ற அரசின் மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மாண்புமிகு திரு. மா. சுப்பிரமணியன் அவர்கள் உத்தரவுப்படி மேற்படி உத்தரவு ரத்து செய்யப்பட்டு 18.08.2021 முதல் நாகப்பட்டினம் மாவட்டம் செம்பனார்கோவில் வட்டாரத்தில் உணவு பாதுகாப்பு அலுவலராக நியமிக்கப்பட்டு பணிபுரிந்து வருகின்றார். மேற்படி பழிவாங்கும் மாறுதலை இரத்து செய்து உத்தரவிட்டபோது வழங்கப்பட்ட உறுதிமொழியின் அடிப்படையில் கடந்த ஆட்சியால் பழிவாங்கப்பட்டு உணவு பாதுகாப்புத் துறையிலிருந்து வெளியேற்றப்பட்ட 18 மாத காலத்தை கட்டாய காத்திருப்பு காலமாக கருதி தகுந்த உத்தரவு வழங்கிட வேண்டும்.

இந்திய அளவில் பல்வேறு பரிசுகளை பெற்றுள்ள தமிழ்நாடு அரசின் உணவு பாதுகாப்புத் துறையில் பணிபுரிந்துவரும் உணவு பாதுகாப்பு அலுவலர்கள் உரிய பணியை நிறைவேற்ற அவகர்ளுக்கு அலுவலக வசதி, வாகன வசதி, உதவியாளர் பணியிடம் உள்ளிட்ட அலுவலக கட்டமைப்பு வசதிகளை செய்து மக்களுக்கு பாதுகாப்பான உணவு முறையாக கிடைத்திட உதவ வேண்டும் என தமிழக அரசை தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கம் கனிவுடன் கேட்டுக்கொள்கிறது.

**5. நெடுஞ்சாலைத்துறையில் நிலுவையில் உள்ள கருணை அடிப்படையிலான பணியிடங்களை உடனடியாக நிரப்பிட கோருதல்:**

நெடுஞ்சாலைத்துறையில் கருணை அடிப்படையில் பணிநியமனம் கோரி 10 வருடங்களுக்கு மேல் காத்திருக்கின்றனர். நெடுஞ்சாலைத்துறையில் காலிப்பணியிடங்கள் அதிகமாக உள்ளது. பணிநியமனம் கோரி காத்திருக்கும் அனைவருக்கும் அவர்கள் விருப்பத்தின் பேரில் கருணை அடிப்படையில் பணிநியமனம் வழங்கிட வேண்டும்

நெடுஞ்சாலைத்துறையில் மிக முக்கிய பணியிடமான வரைதொழில் அலுவலர் பணியிடங்கள் 80 சதவிதத்திற்கு மேல் காலியாக உள்ளது. இந்தப்பணியிடங்களை நிரப்பிட வேண்டும்.

நெடுஞ்சாலைத்துறையில் மிக முக்கிய பணியிடமான பதிவுறு எழுத்தர் பணியிடங்கள் 90 சதவிகிதம் காலியாக உள்ளன. துறையின் ஒட்டுமொத்த பணிகளும் பிரிவு அலுவலங்கள் மூலம் தான் செயல்படுத்தப்படும் நிலை ஆகும். எனவே, நெடுஞ்சாலைத் துறையில் காலியாக இருக்கின்ற பதிவுறு எழுத்தர் பணியிடங்களை நிரப்பிட வேண்டும்

நெடுஞ்சாலைத்துறையில் பணிபுரிந்துவரும் கோட்டக்கணக்கர்களுக்கு மேம்படுத்தப்பட்ட ஊதியம் நெடுஞ்சாலைத்துறையில் மிக முக்கிய பணியிடங்களில் கோட்டக்கணக்கர்க்காளர்களின் பணிதான் ஒட்டுமொத்த துறையின் வரவு- செலவு உள்ளிட்ட அனைத்துப்பணிகளையும் செய்யக்கூடிய பணியாகும். கோட்டப் பொறியாளர்களுக்கு நிதி ஆலோசகர் என்ற பொறுப்புடன் பணிபுரிந்து வருகின்றனர். கோட்டக்கணக்கர் பணியிடமானது மாநில கணக்காயர் மூலம் நடத்தப்படும் தேர்வு எழுதி தேர்ச்சி பெற்ற உதவியாளர் கண்காணிப்பாளர்கள் தான் கோட்டக்கணக்கர்களாக பதவி உயர்வில் செல்கின்றனர். இவர்களுக்கான ஊதியம் என்பது கண்காணிப்பாளர்களுக்கான ஊதியம் தர ஊதியமாக ரூ.4800/- என்ற அடிப்படையில்தான் வழங்கப்படுகிறது. இவர்களின் பணித்தன்மைக்கேற்ப மேம்படுத்தப்பட்ட ஊதியம் வழங்கிட வேண்டும் அரசாணை எண் 338ல் 2006ஆம் ஆண்டு ஒருநபர் ஊதியக்குழுவில் அறிவிக்கப்பட்டபடி நெடுஞ்சாலைத்துறையில் பணிபுரியும் சாலைப்பணியாளர்களுக்கு மாத ஊதியம் ரூ.5200 (தரஊதியம் ரூ.1900) -20200 என்ற ஊதிய விகிதத்தின்படி வழங்கிடவேண்டும் என தமிழக அரசை தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கம் கனிவுடன் கேட்டுக்கொள்கிறது.

**6. இந்து சமயம் மற்றும் அறநிலையத்துறையில் ஆய்வாளர்ளுக்கு அலுவலக கட்டமைப்பு வசதிகளை செய்து தர கோருதல்:**

இந்து சமயம் மற்றும் அறநிலையத்துறையில் நூறு திருக்கோயில்களுக்கு ஒரு ஆய்வாளர் பணியிடம் ஏற்படுத்த வேண்டும். ஆய்வாளர்களுக்கு கணினி தட்டச்சர் மற்றும் அலுவலக உதவியாளர், தனியே ஓர் அலுவலகம், வாகன வசதி உள்ளிட்ட அடிப்படை கட்டமைப்பு வசதிகளை செய்து தரவேண்டும்.

முப்பத்தைந்து ஆண்டுகளுக்கும் மேலாக பணிபுரிந்து வரும் கண்காணிப்பாளர்களுக்கு உரிய காலத்தில் உதவி ஆணையர் பதவி உயர்வு வழங்க வேண்டும். கண்காணிப்பாளர் நிலையிலிருந்து பதவி உயர்வில் செல்பவர்கள் ஓய்வில் செல்வதால் ஏற்படும் காலிப்பணியிடங்களை மீண்டும் கண்காணிப்பாளர் நிலையிலிருந்தே பதவி உயர்வு வழங்கும் வகையில் இந்து சமய அறநிலையத்துறை பணிவிதிகளில் திருத்தம் மேற்கொள்ள வேண்டும் என தமிழக அரசை தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கம் கேட்டுக்கொள்கிறது.

**7. ஈரோடு மாவட்டம் IRTT மருத்துவக் கல்லூரி மற்றும் மருத்துவமனை ஊழியர்களுக்கு பொது வருங்கால வைப்புநிதி திட்டத்தின் அடிப்படையில் பிடித்தம் செய்திட கோருதல்:**

ஈரோடு மாவட்டம் பெருந்துறை IRTT அரசு மருத்துவக் கல்லூரி மற்றும் மருத்துவமனை சாலை போக்குவரத்து கழகத்தின் சார்பில் செயல்பட்டு வந்தது. அது கடந்த 26.02.2020 முதல் அரசு மருத்துவக் கல்லூரி மற்றும் மருத்துவமனையாக மாற்றம் செய்யப்பட்டுள்ளது. ஆனால் அதில் பணிபுரிந்து வருகின்ற 150க்கும் மேற்பட்ட ஊழியர்களுக்கு பிடித்தம் செய்யப்பட்டு வந்த தொழிலாளர் வருங்கால வைப்புநிதி (EPF) பிடித்தம் நிறுத்தம் செய்யப்பட்டு 26.02.2020 முதல் எவ்வித பிடித்தமும் இல்லாமல் முழு ஊதியம் பெற்றுவருகிறார்கள். அவர்களுக்கு பொது வருங்கால வைப்புநிதியினை முன் தேதியிட்டு பிடித்தம் செய்திடவேண்டும் என தமிழக அரசை தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கம் கனிவுடன் கேட்டுக்கொள்கிறது

**8. தொழிற் பயிற்சி நிலையங்களில் தொழில்நுட்ப வளர்ச்சிக்கு ஏற்றவாறு, பயிற்சியின் தரத்தினை உயர்த்திட புதிய நவீன இயந்திரங்கள் மற்றும் கருவிகள் வழங்கிட கோருதல்:**

இந்திய நாட்டின் தொழிற் வளர்ச்சிக்கு முக்கிய பங்கு வகிக்கும் திறன்மிகு தொழிலாளர்களை உருவாக்கிட 1964 ஆம் ஆண்டில் தமிழகத்தில் துறை உருவாக்கப்பட்டபோது அரசினர் தொழிற் பயிற்சி நிலையங்களில் கொள்முதல் செய்யப்பட்டு தற்போது காலாவதியான, பழுதடைந்த இயந்திரங்கள் மற்றும் தளவாடங்கள் தற்போதும் பயிற்சிக்குப் பயன்படுத்தப்பட்டு வருகிறது. அரசினர் வேலை வாய்ப்பு மற்றும் பயிற்சித் துறையின் தொழிற் பயிற்சி நிலையங்களில் தற்போதைய தொழில்நுட்ப வளர்ச்சிக்கு ஏற்றவாறு, பயிற்சியின் தரத்தினை உயர்த்திட புதிய நவீன இயந்திரங்கள் மற்றும் கருவிகள் வழங்கிட வேண்டும் என தமிழக அரசை தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கம் கனிவுடன் கேட்டுக்கொள்கிறது.

**9. 10 ஆண்டுகளாக தொகுப்பு ஊதியத்தில் பணியாற்றும் மருந்தாளுநர்கள், துணை செவிலியர்கள், ஆய்வக நுட்புநர்கள், பல்நோக்கு மருத்துவமனை பணியாளர்கள் பணிவரன்முறை செய்திட கோருதல்:**

மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறையில் மருந்தாளுநர் மற்றும் விடுபட்ட அனைவருக்கும் கொரோனா ஊக்கத் தொகை வழங்கிட வேண்டும். நகர்புற ஆரம்ப சுகாதார நிலைகளில் 10 ஆண்டுகளாக தொகுப்பு ஊதியத்தில் பணியாற்றும் மருந்தாளுநர்கள், துணை செவிலியர்கள், ஆய்வக நுட்புநர்கள், பல்நோக்கு மருத்துவமனை பணியாளாகளை பணிவரன் முறை செய்திட வேண்டும்.

மக்களை தேடிய மருத்துவம் திட்டத்தில் நோயாளிகளின் நலன் கருதி மருந்துகளை வழங்கிடும் பணிக்கு மருந்தாளுநர்

பணியிடங்களை உருவாக்கிட வேண்டும். நோயாளிகளின் எண்ணிக்கைகேற்ப மக்கள் நலன் கருதி மருந்தாளுநர் பணியிடங்களை கூடுதலாக உருவாக்கிடவேண்டும். 32 ஆண்டுகள் கடந்தும் பதவி உயர்வு இன்றி ஓய்வு பெறும் அவல நிலையினை போக்கிட கூடுதலாக மூன்று கட்ட பதவி உயர்வு வழங்கிட வேண்டும். அரசுத் துறையில் மருந்து வழங்கும் துவக்கநிலை பணியான மருந்தாளுநர் பணி அமர்வுக்கான அடிப்படைவிதி 6Bன்படி டிப்ளமோ பார்மசி என்பதை தொடர்ந்து அமல்படுத்திட வேண்டும் என தமிழக அரசை தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கம் கனிவுடன் கேட்டுக்கொள்கிறது.

**10. நீதித் துறையில் தற்காலிக பணியாளர்களாக பல ஆண்டுகளாக பணியாற்றி வருபவர்களை பணிநிரந்தரம் செய்திட கோருதல்:**

தமிழ்நாடு நீதித்துறையில் கீழமை நீதிமன்றங்களில் சுருக்கெழுத்து தட்டச்சர் (Steno Typist), இளநிலை உதவியாளர் (Junior Assistant), தட்டச்சர் (Typist) மற்றும் கணிப்பொறி இயக்குநகர் (Computor Operator) ஆகிய பணியிடங்களில் தற்காலிக பணியாளர்களாக நூற்றுக்கணக்கான ஊழியர்கள் பல ஆண்டுகளாக பணியாற்றி வருகிறார்கள். அதேபோல நூற்றுக்கணக்கான ஊழியர்கள் தற்காலிக பணியாளர்களாக பணியாற்றிய பிறகு பணி நீக்கம் செய்யப்பட்டு தங்கள் வாழ்வாதாரத்தை இழந்து தவிக்கிறார்கள். இவர்களில் பெரும்பாலானோர் அரசுப் பணியில் சேர்வதற்கான வயது வரம்பை கடந்த நிலையில் உள்ளனர். தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்தால் நிரந்தர ஊழியர்கள் தேர்வு செய்து வழங்கப்படாத சூழ்நிலையில் நீதித்துறையில் சிறப்பான முறையில் பணியாற்றி

மக்களுக்கு நீதி வழங்கும் பணியில் எவ்வித இடையூறும் ஏற்படாவண்ணம் பணிபுரிந்தவர்கள் இந்த தற்காலிக பணியாளர்கள் தான். மேலும் இவர்கள் மாவட்ட வேலைவாய்ப்பகங்களில் பதிவுமூப்பு அடிப்படையிலும் போட்டித் தேர்வு மூலமாகவும் நேர்காணல் மூலமாகவும் தகுதி மற்றும் இனச்சுழற்சி அடிப்படையில் தேர்வு செய்யப்பட்டு தற்காலிக பணியாளர்களாக நீதித்துறையில் பணியாற்றியவர்கள் ஆவார்கள்.

கடந்த காலங்களில் நீதித்துறை உட்பட பல்வேறு துறைகளில் நீண்ட காலம் தற்காலிக ஊழியர்களாக பணியாற்றியவர்களையும், தற்காலிக ஊழியர்களாக பணியாற்றி பணிநீக்கம் செய்யப் பட்டவர்களையும் தொகுப்பு ஊதியத்தில் பணியாற்றியவர்களையும் காலமுறை ஊதியத்தில் நிரந்தர ஊதியர்களாக அரசாணை மூலமும் போட்டித் தேர்வுகள் மூலமும் நியமித்த வரலாறு தமிழக அரசுக்கு உண்டு. தற்போதைய சூழ்நிலையில் நீதித்துறையிலும் பிற துறைகளிலும் ஏராளமாக காலிப்பணியிடங்கள் உள்ள நிலையில் தமிழ்நாடு நீதித்துறையில் பல ஆண்டுகளாக தற்காலிக ஊழியர்களாக பணியாற்றி வரும் ஊழியர்களை அவர்கள் நீதித்துறையில் பணிபுரிந்த அனுபவம், வயது மூப்பு, வாழ்வாதாரம் போன்றவற்றை கருத்தில் கொண்டு அந்த பணியிடங்களிலேயே பணி நிரந்தரம் செய்வதற்கான சிறப்பு அரசாணையை வெளியிட வேண்டுமென்றும் ஏற்கனவே பல ஆண்டுகள் தற்காலிக ஊழியர்களாக நீதித்துறையில் பணியாற்றி பணி நீக்கம் செய்யப்பட்டவர்களை பணி நிரந்தர செய்யும் வகையில் சிறப்பு தேர்வு நடத்தி நீதித்துறையிலும் பிற துறைகளிலும் நிரந்தர ஊழியர்களாக பணியாற்ற வாய்ப்பு வழங்க வேண்டுமென்றும் தமிழக அரசை தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கத்தின் மாநில மாநாட்டின் வாயிலாக தமிழ்நாடு நீதித்துறை ஊழியர் சங்கம் கேட்டுக் கொள்கிறது. மேலும், இவர்களை பணி நிரந்தரம் செய்வதன் மூலம் அரசுக்கு எவ்விதமான கூடுதல் பண இழப்பும் ஏற்படப் போவதில்லை. ஏனென்றால், ஏற்கனவே அவர்களில் பலர் அந்த பணியிடங்களுக்கான ஊதியத்தை காலமுறை ஊதியமாக பெற்றுக் கொண்டு வருகிறார்கள். பணிநீக்கம் செய்யப்பட்டவர்களும் ஏற்கனவே உள்ள பணியிடங்களில் தான் பணிபுரிய இருக்கிறார்கள். புதிய பணியிடங்கள் ஏற்படுத்தப்பட வேண்டிய தேவை எதுவும்

இல்லை என்பதையும் தமிழ்நாடு அரசின் கனிவான கவனத்திற்கு கொண்டு வருகிறோம்.

தமிழக அரசால் நியமிக்கப்பட்ட நீதியரசர் முருகேசன் குழுவின் மூலமாக பல துறைகளில் பணியாற்றும் ஊழியர்களுக்கான ஊதிய முரண்பாடுகள் களையப்பட்டுள்ள நிலையில், நீதித்துறை ஊழியர்களுக்கான ஊதிய முரண்பாடுகள் களையப்படாமல் உள்ளது. எனவே, நீதியரசர். முருகேசன், குழுவிடம் தமிழ்நாடு நீதித்துறை ஊழியர் சங்கம் முன் வைத்த கோரிக்கைகளை பரிசீலனை செய்து ஊதிய முரண்பாடுகளை களைவதற்கான அரசாணைகளை வெளியிட வேண்டுமென தமிழ்நாடு அரசை கேட்டுக் கொள்கிறோம்.

**11. தமிழ்நாடு கிராம சுகாதார செவிலியர்களுக்கு 5 கட்ட பதவி உயர்வினை வழங்கிட கோருதல்:**

32 ஆண்டுகள் கடந்தும் பதவி உயர்வின்றி ஓய்வுபெறும் அவல நிலையினை களைந்திட, கிராம சுகாதார செவிலியர்களுக்கு 5 கட்ட பதவி உயர்வினை வழங்கிட வேண்டும். கிராம சுகாதார செவிலியர்களுக்கு இடையே உள்ள ஊதிய முரண்பாட்டை களைந்து பொது சுகாதாரத் துறையில் ஆண் மற்றும் பெண் களப் பணியாளர்களுக்கிடையே உள்ள சமநிலையற்ற ஊதியத்தினை களைந்து சமவேலைக்கு சம ஊதியம் வழங்கிட வேண்டும். பொது சுகாதாரத் துறையில் துணை சுகாதார மையங்களில் செவிலியர்களை நியமனம் செய்வதை கைவிட்டு பல் நோக்கு சுகாதார பயிற்சி பெற்ற கிராம சுகாதார செவிலியர்களை காலமுறை ஊதியத்தில் நியமனம் செய்திட வேண்டும் என தமிழக அரசை தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கம் கனிவுடன் கேட்டுக்கொள்கிறது

**12. வருவாய்த் துறையில் பதவி உயர்வு அலுவலர்களுக்கும் நேரடி நியமன அலுவலர்களுக்கும் இடையிலான பணி முதுநிலை நிர்ணயம் செய்திட கோருதல்:**

வருவாய்த் துறையில் தமிழ்நாடு அரசு பணியாளர் தேர்வாணையம் மூலம் தொகுதி 4ன் மூலம் பணிக்கு வருபவர்கள், கருணை அடிப்படையில் பணி நியமனம் பெறுபவர்கள், பயிற்சிகள் பெற்று, துறைத்தேர்வுகள் தேர்ச்சி பெற்று முதுநிலை வருவாய் ஆய்வர்களாக பதவி உயர்வு பெறும்போது அவர்களுக்கும் தொகுதி 2-ன் மூலம் தேர்ச்சி பெற்று நேரடியாக முதுநிலை வருவாய் ஆய்வாளர்களாக வரும் நேரடி நியமன அலுவலர்களுக்கும் இடையிலான பணிமுதுநிலை தொடர்பான Inter -se-seniority நிர்ணயிப்பதில் மாவட்டங்களில் நிலவி வரும் முரண்பாடுகளை சரிசெய்யும் வகையில் வருவாய் நிர்வாக ஆணையரகம் மூலம் தக்க வழிகாட்டு நெறிமுறைகளை வெளியிடவேண்டும் என தமிழக அரசை தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கம் கனிவுடன் கேட்டுக்கொள்கிறது.

**13. பொது சுகாதார துறையின் சுகாதார செவிலியர்களுக்கான அனைத்து உரிமைகளைம் நகராட்சி, மாநகராட்சி செவிலியர்களுக்கும் விரிவுபடுத்த கோருதல்:**

பொது சுகாதார துறையில் பணியாற்றும் கிராம சுகாதார செவிலியர்களுக்கு வழங்கப்படும் அனைத்து அரசாணைகளும் நகராட்சி, மாநகராட்சியில் பணிபுரியும் கிராம சுகாதார செவிலியர், பகுதி சுகாதார செவிலியர்களுக்கும் பொருந்தும் வகையில் அமல்படுத்திட வேண்டும். வருடம் ஒருமுறை வெளிப்படை தன்மையுடன் கலந்தாய்வு மூலம் பணிமாறுதல் வழங்கிட வேண்டும். நகராட்சி, மாநகராட்சிகளில் பணிபுரியும் கிராமசுகாதார செவிலியர், பகுதி சுகாதார செவிலியர்களுக்கு கொரோனா ஊக்கத் தொகையும், சமுதாய சுகாதார செவிலியர் பதவி உயர்வு வழங்கிட வேண்டும் என தமிழக அரசை தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கம் கனிவுடன் கேட்டுக்கொள்கிறது.

**14. விதைச்சான்று துறையின் தலைமை அலுவலகத்தினை கோயமுத்தூரிலிருந்து சென்னைக்கு மாற்றுவதை கைவிட கோருதல்:**

வேளாண்மைத் துறையின் கீழ் செயல்படும் விதைச் சான்று துறையின் தலைமை அலுவலகத்தினை அரசு நலத் திட்டங்களில் பயன்பெறும் விவசாயிகளின் நலன்கருதி கோயமுத்தூரிலிருந்து சென்னைக்கு மாற்றுவதை கைவிட வேண்டும் என தமிழக

அரசை தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கம் கனிவுடன் கேட்டுக்கொள்கிறது.

**15. விவசாயிகள் நலன் கருதி நல திட்டங்களை குறைப்பதை கைவிட கோருதல்:**

பட்டுவளர்ச்சித் துறையில் காலியாக உள்ள இளநிலைபட்டு ஆய்வாளர் பணியிடங்களை நிரப்பிடவேண்டும். ஒசூர் அரசு பட்டு முட்டை வித்தக உதவி இயக்குநர் அலுவலகத்தில் அமைச்சுப்பணியாளர் பணியிடம் உருவாக்கிட வேண்டும். விவசாயிகள் நலன் கருதி திட்டங்களை குறைப்பதை கைவிடவேண்டும். அதிதீவிர பருவமழையால் பாதிக்கப்பட்ட பட்டு விவசாயிகளுக்கு ஒரு ஏக்கருக்கு ரூ.14000/- வழங்கிட வேண்டும். திருப்பத்தூர், இராணிப்பேட்டை, வேலூர், செங்கல்பட்டு, காஞ்சிபுரம் மற்றும் திருவள்ளூர் உள்ளிட்ட 6 மாவட்டங்களுக்கு வாணியம்பாடி மற்றும் இராணிப்பேட்டை இரண்டு இடங்களில் தலைமையிடமாக கொண்டு உதவி இயக்குநர் அலுவலகம் உருவாக்கிட வேண்டும். தாளவாடி, ஏற்காடு, ஏலகிரி பகுதிகளில் பணிபுரியும் ஊழியர்களுக்கு மலைவாழ் படி குளிர்காலப்படி வழங்கிட வேண்டும். தனியார் கட்டிடங்களில் இயங்கும் பட்டுவளர்ச்சித் துறை அலுவலகங்களுக்கு அரசே நேரடியாக அலுவலகங்கள் அமைத்து தர வேண்டும் என தமிழக அரசை தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கம் கனிவுடன் கேட்டுக்கொள்கிறது.

**16. புதிதாக உருவாக்கப்பட்டுள்ள மாவட்டங்கள், வருவாய் கோட்டங்கள் மற்றும் வட்டங்களில் புதிய புள்ளியல் சார்நிலை அலுவலர் பணியிடங்களை உருவாக்க கோருதல்:**

பொருளியல், புள்ளியல் துறையில் புதிதாக உருவாக்கப்பட்டுள்ள மாவட்டங்கள், வருவாய் கோட்டங்கள், வட்டங்களுக்கான புதிய பணியிடங்களை உருவாக்கிட வேண்டும். பொருளியல், புள்ளியல் துறையில் தங்கும் வசதியுடன் பயிற்சிமையம் அமைத்திட வேண்டும் என தமிழக அரசை தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கம் கனிவுடன் கேட்டுக்கொள்கிறது.

**17. பேரூராட்சித் துறையில் நீண்டகாலமாக பணிபுரியும் தற்காலிக ஊழியர்களை பணிநிரந்தரம் செய்திட கோருதல்:**

நீண்ட காலமாக பேரூராட்சிகளில் குறைந்த ஊதியத்துடன் பணிபுரிந்து வரும் கணிணி இயக்குபவர்கள், ஓட்டுநர்கள், சுய உதவிக்குழு மூலம் பணிபுரியும் தூய்மை பணியாளர்கள் மற்றும் குடிநீர் மற்றும் தெருவிளக்கு பராமரிப்புப் பணியாளர்கள் அனைவரையும் பணி நிரந்தரம் செய்திட வேண்டும்.

நீண்டகாலமாக பதவி உயர்வு இல்லாமல் பணிபுரியும் தொழில் நுட்ப ஊழியர்களுக்கு பணிவிதிகள் உருவாக்கி பிற துறைகளில் வழங்குவது போன்று ஓவர்சியர் பதவி உயர்வு வழங்க வேண்டும்.

அனைத்து நிலை செயல் அலுவலர்களுக்கும் பதவி உயர்வு மற்றும் இடமாறுதலில் பிற துறைகளில் வழங்குவது போன்று கலந்தாய்வு முறையை பின்பற்றும் வகையில் அரசாணை வழங்க வேண்டும்.

அனைத்து மாவட்டங்களிலும் உள்ள கீழ்நிலை பணியாளர்களுக்கு அரசாணை எண்.150, நாள் 19.08.1996-ன்படி 20% அடிப்படையில் பதவி உயர்வு வழங்க வேண்டும்.

அரசாணை எண்.338, நிதி (ஊதியக்குழு) துறைநிலை 26.08.2010-ன்படி பேரூராட்சிகளில் பணிபுரியும் குடிநீர் திட்டம் மற்றும் மின் பராமரிப்புப் பணியமைப்புப் பிரிவில் பணிபுரியும் தனித்திறனற்ற பணியாளர்களுக்கு 5200-20200+1900 ஊதியவிகிதத்தில் 15 ஆண்டுகளாக பெற்று வந்த ஊதியத்தை தொடர்ந்து பெற்றிட ஏதுவாக பேரூராட்சிகளின் இயக்குநர் அவர்களின் ஆணை ந.க.எண்.21256/2012/அ3, நாள். 10.06.2013 ல் குறிப்பிட்டுள்ள பணியிடங்களுக்கு ஊரக வளர்ச்சித் துறையின் அரசாணை எண்.24, நாள்.23.02.2011 ல் வழங்கியது போன்று பேரூராட்சி துறையில் நிதித் துறை ஒப்புதலோடு அரசாணை வழங்கி பணியாளர் நலன் காத்திட வேண்டும்.

பேரூராட்சித் துறையில் பணிபுரியும் தூய்மை பணியாளர்களில் பணியின்போது இறந்த பணியாளர்களின் வாரிசுகளுக்கு கல்வி தகுதி அடிப்படையில் கருணை அடிப்படையில் இளநிலை உதவியாளர் பணி பேரூராட்சி துறையில் மறுக்கப்பட்டுள்ளது. எனவே, தூய்மை பணியாளர் வாரிசுக்கு இளநிலை உதவியாளர் பணி வழங்கும் விதித்தில் அரசாணை எண்.206 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை நாள்.02.11.1995-ல் போதிய திருத்தம் செய்து அரசாணை வழங்க வேண்டும்.

பொது சுகாதார பிரிவில் பேரூராட்சிகளில் பணிபுரியும் தூய்மை பணியாளர்களுக்கு இரு அரை நாட்கள் விடுமுறை வழங்குவதால் எந்த பயனும் இல்லாமல் உள்ளது. எனவே, தூய்மை பணியாளர்களுக்கு வார விடுமுறை சுழற்சி முறையில் முழு நாளாக வழங்குவது மற்றும் சலவைப்படி மாதம் ரூ.200/- வழங்க வேண்டும் என தமிழக அரசை தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கம் கனிவுடன் கேட்டுக்கொள்கிறது.

**18. தமிழ்நாடு அரசின் அனைத்து துறைகளில் பணிபுரியும் மாற்றுத்திறனாளி ஊழியர்களுக்கு பதவி உயர்வில் இட ஒதுக்கீடு வழங்கிட கோருதல்:**

தமிழ்நாடு அரசின் அனைத்து துறைகளில் பணிபுரியும் மாற்றுத் திறனாளி ஊழியர்களுக்கு பதவி உயர்வில் 4 சதம் இட ஒதுக்கீடு வழங்க வேண்டும். அரசாணை எண் 151 சமூக நலம் மற்றும் சத்துணவு திட்ட (சந4) துறை நாள் 16.10.2008 இன் படி இரண்டாண்டுகள் தொகுப்பூதியத்தில் அனைத்து அரசுத் துறைகளிலும் பணியாற்றும் மாற்றுத்திறனாளி அரசு ஊழியர்களுக்கு காலமுறை ஊதியம் வழங்கிட வேண்டும். மாற்றுத் திறனாளி அரசு ஊழியர்களுக்கு பணியிடமாறுதலில் அவர்கள் விரும்பும் அவர்கள் வசிக்குமிடத்திற்கு அருகாமையில் பணிமாறுதல் வழங்கவேண்டும். இயற்கைப் பேரிடர் காலங்களில் அலுவலகத்திற்கு வருவதிலிருந்து விலக்களிக்க வேண்டும் என தமிழக அரசை தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கம் கனிவுடன் கேட்டுக்கொள்கிறது.

**19. தமிழக அரசின் வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித்துறையில் தொகுப்பூதியத்தில் பணிபுரிந்து வரும் அனைவரையும் காலமுறை ஊதியத்தில் பணிநிரந்தரம் செய்திட கோருதல்:**

தமிழக அரசின் வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித்துறையில் கடந்த 2005 ஆம் ஆண்டு அதிமுக ஆட்சியில் வேலை நியமனத் தடைச் சட்டம் அமல்படுத்தப்பட்ட போது Essential service ல் தமிழக அரசின் வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித்துறையில் பணிமனை உதவியாளர்கள் 84 பேர் ரூ.2000/- மாத ஊதியத்தில் தொகுப்பூதிய அடிப்படையில் அரசு விதிப்படி பணிநியனம் செய்யப்பட்டார்கள். தொடர்ந்து குறைந்த ஊதியத்தில் பணிபுரிந்த நிலையில் அடுத்து வந்த திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியில் தொடர்ந்து கோரிக்கை அளிக்கப்பட்டதன் அடிப்படையில் 2010 ஆம் ஆண்டு பணிநிரந்தரம் செய்யப்பட்டு 75 பேர் முறையான காலமுறை ஊதியத்தில் நிரந்தரம் செய்யப்பட்டு அன்றைய துணை முதல்வரும், இன்றைய மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களின் கரங்களால் அதற்கான ஆணை பெற்றார்கள். அவர்களின் பதவி உயர்வு மற்றும் பணி ஓய்வு பலன்களை கருத்தில் கொண்டு அவர்களின் தொகுப்பூதிய காலத்தை பணிக்காலமாக அறிவிக்க வேண்டும்

தமிழக அரசின் வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித்துறையில் பயிற்சிப்பிரிவில் Public Private Partnership மற்றும் Centre of Excellence போன்ற திட்டத்தின் கீழ் பயிற்றுனர்கள் மற்றும் அலுவலர்கள் அரசு விதிகளின்படி முறையாக தேர்வு செய்யப்பட்ட சுமார் 146 பேர் தொகுப்பூதியத்தில் ரூ.20,000/- தொகுப்பூதியத்தில் கடந்த 12 ஆண்டுகளாக பணிபுரிந்து வருகிறார்கள். பணி உத்திரவாதம் இல்லாத நிலையில் மிகவும் சிரமமான நிலையில் பணிபுரிந்து பயிற்றுனர்கள் மற்றும் அலுவலர்களை முறையான காலமுறை ஊதியத்தில் பணிநிரந்தரம் செய்திட வேண்டும் என தமிழக அரசை தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கம் கனிவுடன் கேட்டுக்கொள்கிறது.

(தொடரும்) ●

# பஞ்சப்படிக்கு வயது 80!

இந்திய அரசு தனது ஊழியர்களுக்கு ஊதியத்துடன் விலைவாசியின் தன்மைக்கேற்ப பஞ்சப் படியை 1942இல் ஆகஸ்ட் மாதம் முதல் தவணையை வழங்கியது. இப் பஞ்சப் படியை வழங்கிட அண்ணல் டாக்டர் அம்பேத்கர் அவர்கள் சட்ட முன்வடிவை அன்றைய பிரிட்டிஷ் இந்திய பாராளுமன்றத்தில் கொண்டு வந்தார். அது சட்டமாக்கப்பட்டு நடைமுறைக்கு வந்தது ஆகஸ்ட் 1942. இன்றைக்கு என்பது வருடம் ஆகிறது. இந்த ஆண்டு ஆகஸ்டில் 81 ஆம் ஆண்டு துவங்கும். 1972 ஆண்டு மத்திய அரசின் சட்டப்படி ஜனவரி மற்றும் ஜுலை யில் இரண்டு தவணைகள் பஞ்சப்படி வழங்கப்பட்டு வருகிறது. தமிழ்நாட்டில் 1978ல் பஞ்சப்படிக்காக போராட்டம் நடைபெற்றது. நடவடிக்கை குழுவில் இருந்து செயல்பட்ட அரசு ஊழியர் சங்க தலைவர்களின் முன்னோடிகள் அன்று போராட்டத்தை நடத்தினார்கள். போராடிப் பெற்ற பஞ்சப்படியை இன்றைய மத்திய அரசு முடக்க வழிவகையை தேடுகிறது. கொரானா பெருந்தொற்றை காரணம் காட்டி 2020 ஜனவரி முதல் 2021 ஜுன் முடிய 18 மாதங்கள் பஞ்சப்படியை முடக்கியது. மாநில அரசுகளும் மத்திய அரசை போல் முடக்கி வைத்திருந்தது முந்தைய தமிழக அரசும் அதை பின்பற்றியது. இந்த சூழலில் நாம் பஞ்சப்படிக்கான போராட்டத்தை நடத்தியதும் கடந்த காலங்களில் 2016லிருந்து தொடர்ந்து இயக்கமாக நாம் நடத்திய போராட்டமும் இன்றைய அரசு 14 சதம் பஞ்சப்படி வழங்குவதற்கான அடிப்படையாக அமைந்துள்ளது. மேலும் தமிழக அரசு பஞ்சப்படி மற்றும் இதர உரிமைகளை வழங்குவதற்கு முத்தாய்ப்பாக அமைந்தது நமது 14 ம் மாநாடும் அதன் பிரச்சார இயக்கமும் ஆகும். நமது வலுவான பிரச்சாரம் இன்றைய அரசை நமது கோரிக்கையை நிராகரிக்க முடியாத நிலையை உருவாக்கியது என்பது நாம் பெற்றுள்ள 14 சத பஞ்சப்படியே!

மத்திய அரசு அரசியல் சட்ட விழுமியங்களை அழித்து மறைத்திட எத்தனித்து வரும் வேளையில் சட்ட உரிமை பெற்ற பஞ்சப்படி மற்றும் இதர உரிமைகளை பாதுகாக்க போராட்டம் ஒன்றே நமது பாதை என்பதை மாநாடும் கடந்தகால அனுபவமும் நமக்கு கூறுகிற இத்தருணத்தில் போராடும் அமைப்பாம்அரசு ஊழியர் சங்கத்தை பாதுகாப்போம் அதன் வழி பயணிப்போம்.

**ம.அந்தோணி சாமி**, மாவட்ட செயலாளர், வடசென்னை

# மயிலாடுதுறை மாவட்ட மைய அலுவலகத் திறப்பு விழா

தமிழ்நாடு அரசு ஊழியர் சங்க மயிலாடுதுறை மாவட்ட மைய அலுவலகத் திறப்பு விழா இன்று (02.02.2022) மாலை மாவட்டத் தலைவர் தோழர் ஆர். சிவபழனி தலைமையில் நடைபெற்றது. மாநிலச் செயலாளர் தோழர் எஸ்.கோதண்டபாணி ரிப்பன் வெட்டி சங்க அலுவலகத்தை திறந்து வைத்தார். மாவட்டப் பொருளாளர் தோழர் ஆர்.கலா வரவேற்புரையாற்றினார். மேனாள் மாவட்டத் தலைவர் தோழர் து.கணேசன் துவக்கவுரையாற்றினார். TNROA மயிலாடுதுறை வட்டத் தலைவர் தோழர் கே.ராஜன், TNSOU மயிலாடுதுறை கோட்டத் தலைவர் தோழர் வீ.இளையராஜா, மாவட்ட துணைத் தலைவர் தோழர் ஆர்.தர்மராஜ், விவசாய சங்கத் தலைவர் தோழர் எஸ்.துரைராஜ், விவசாய தொழிலாளர் சங்கத் தலைவர் தோழர் ஜி.ஸ்டாலின், கூட்டு நடவடிக்கைக்குழு பொதுச் செயலாளர் தோழர் த.ராயர், இந்திய தொழிற்சங்க மைய மாவட்ட துணைச் செயலாளர் தோழர் ஆர்.ராமானுஜம், அனைத்துத்துறை ஓய்வூதியர் சங்க மாவட்டத் தலைவர் தோழர் வ. பழனிவேலு, தொழிற்சங்க தலைவர் தோழர் ப்பி. சீனிவாசன், தமிழ்நாடு அரசு ஊழியர் சங்க நாகை மாவட்டத் தலைவர் தோழர் ப.ராணி, மாவட்டச் செயலாளர் தோழர் அ.தி.அன்பழகன் ஆகியோர் வாழ்த்துரை வழங்கினர். இந்திய தொழிற்சங்க மைய மாவட்டச் செயலாளர் தோழர் ஆர்.ரவீந்திரன் உள்ளிட்ட தோழமை சங்க, தொழிற் சங்க மற்றும் துறைவாரி சங்க தோழர்கள் கலந்துகொண்டு சிறப்பித்தனர். மாநிலச் செயலாளர் தோழர் எஸ்.கோதண்டபாணி நிறைவுரையாற்றினார். மாவட்ட துணைத் தலைவர் தோழர் எம்.நடராஜன் மூன்று Ceiling Fan, மயிலாடுதுறை நகர சார் ஆய்வாளர் தோழர் ஆர்.தர்மராஜ் ஐந்து Nilkamal Chair நன்கொடையாக அளித்ததை தொடர்ந்து நாகை மாவட்ட மையத்தின் சார்பாக பத்து Chair வாங்க ரூ.5,000/- மாவட்ட நிர்வாகிகள் தோழர் ஆர்.சிவபழனி, எம்.நடராஜன். கே. ஜவகர், சீர்காழி வட்ட நிர்வாகிகள் த.ராஜேஷ்குமார் மற்றும் எஸ்.ரமேஷ் ஆகியோர் தலா ரூ.550/- வீதம் ஒரு Chair க்கான தொகை நன்கொடையாக வழங்கினர். மாவட்ட இணைச் செயலாளர் தோழர் செ.பிச்சைப்பிள்ளை நன்றி கூறினார்.

Printed and Published by M. Anbarasu on behalf of Tamil Nadu Government Employees Association, at No.48, New No.46, Car Street, Triplicane, Chennai 600005 and Printed at Chennai Offset Printers, 19/1 & 21/2, Kithabath Khan Bhagadur Street, Ellies Road, Anna Salai, Chennai 600002, Editor: A. SELVAM . Phone: 28441286
E-mail: arasuoozhiyar@gmail.com